# நேசக்கரங்கள்

NESAKKARANGAL නේසක්කරංගල්

அகதி இதழ் தொடர்ச்சி நேசக்கரங்கள் இதழ் 14 செப்டம்பர் 2007





இப்படத்தைப் பாருங்கள்
உங்கள்
சிந்தனா சக்தியில்
உதிக்கும் கவிதையை
எழுதி அனுப்புங்கள்.

# நேசக்கரங்கள்

**இல. 07**
**முப்பது வீட்டுத்திட்ட வீதி,**
**தில்லையடி,**
**புத்தளம்.**

# நேசக்கரங்கள்

**NESAKKARANGAL**

නේසක්කරංගල්

அகதி இதழில் தொடர்ச்சி
இதழ் 14 செப்டம்பர் 2007



**PEOPLE'S SECRETARIAT**

No. 07,
Thirty Housing Scheme Street,
Thillaiyadi,
Puttalam,
Sri Lanka.
Tel/Fax: 0322269339.
E-mail : ps@dynaweb.lk

**மக்கள் பணிமனை**

இல. 07,
முப்பது வீட்டுத் திட்ட வீதி,
தில்லையடி,
புத்தளம்,
இலங்கை.
தொலைபேசி 0322269339
மின்னஞ்சல் ps@dynaweb.lk



இச்சஞ்சிகையில் வெளியாகும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவரே பொறுப்புடையவர்கள்


## உள்ளே......


வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள் தீர்வுத் திட்டத்தில் உள்வாங்கப்படுமா? 2

நாட்டின் அபிவிருத்திக்கு முக்கிய தடைக்கல்லாக விளங்கும் சமகால யுத்தம் 3

பிரிவு (சிறுகதை) 5

சமாதானத் தூது 11

இந்த சமத்துவம் கண்டு சரித்திரம் திகைத்தது 16

இனியவை இருபது 15

கவிச்சோலை 18

முல்லையில் முஸ்லிம்கள் 23

இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் வகையில் அமைந்துள்ள பேரினவாத கட்சிகளின் தீர்வுத்திட்டங்கள் 26

மக்கள் பணிமனையின் கோரிக்கைக்கு கிடைத்த வெற்றியே உலக வங்கியின் புத்தளம் வீட்டுத் திட்டம் 29

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மனித உரிமைப் பிரகடனம் 31

# வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள் தீர்வுத் திட்டத்தில் உள்வாங்கப்படுமா?

இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றில் தற்போதைய காலம் மிக முக்கியமானதொன்றாகும். இலங்கையின் பல்லினத் தன்மை இன்று சர்வதேச சமூகத்தினாலும் இலங்கையில் உள்ள இடதுசாரிக் கட்சிகளாலும், முக்கிய இரு அரசியல் கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளப் பட்ட நிலையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இந்த நாட்டின் பல்லின சமுதாயத்தினரையும் திருப்திப்படுத்தக் கூடிய நிலையில் தீர்வு யோசனைகள் இதுவரையில் முன்வைக்கப்படாதது மிகவும் வேதனைக்குரியதாகும். பிரச்சினையின் முழு வடிவமும் தெளிவாக விளங்கிய நிலையில், தீர்வு யோசனைகளை முன் வைப்பதில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மீண்டும் பழைய பல்லவியான மாவட்ட அதிகாரப் பரவலாக்கல் விடயம் பேசப்படுகின்றது. இதனைக்கூட பேரினவாத சிந்தனை கொண்ட சில கட்சிகள் ஏற்க மறுக்கின்றன.

அவ்வாறாயின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுதான் என்ன? பேராசிரியர் திஸ்ஸ விதாரன அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள சர்வகட்சி அமைப்பில் இறுதித்தீர்மானம் எடுக்கமுடியாமல் இழுபறி நிலையையடைந்துள்ளது. சர்வதேச சமூகமும், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டுமென விரும்புவோரும், வைத்திருந்த இறுதி நம்பிக்கை சர்வகட்சி குழுவின் இறுதி பரிந்துரைதான். ஆனால் இக்குழுவிலும் குறையாடுகள் இல்லாமலில்லை. பிரச்சினையோடு தொடர்புடைய தமிழ்மக்களின் தரப்பிலிருந்து விடுதலைப்புலிகளோ, அல்லது தமிழ்கூட்டமைப்பு கட்சியோ யோசனைகளை முன்வைக்கவுமில்லை, கவனத்திலெடுக்கவுமில்லை.

அதே நேரத்தில் சர்வகட்சிக்குழு முன்வைக்கும் யோசனைகளை அரசாங்கம் முன்னெடுக்குமா? இதனை விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொள்வார்களா? பெரும்பான்மை பேரினவாத சக்திகள் ஏற்றுக் கொள்வார்களா? முஸ்லிம் தரப்புகள் ஏற்குமா? என்பதெல்லாம் கேள்விக்குறியாகவே உள்ளது. இந்நிலையில் தான் வடமாகாண முஸ்லீம்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பாக, கடந்த காலங்களில் வடமாகாண முஸ்லீம் புத்திஜீவிகள், சமூகவியலாளர்கள், அரசியல் தலைமைகள் மத்தியில் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள், செயலமர்வுகள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட தீர்வு யோசனையை, பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களிடம் மக்கள் பணிமனையின் தலைவரால் கையளிக்கப்பட்டது.

அவர் இந்த தீர்வு ஆலோசனையைப் பார்த்து விட்டு மிகவும் வரவேற்கத்தக்க முறையில் அமைந்துள்ளதாக கூறியதுடன், முஸ்லிம் கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளிலோ, நடைபெற்ற குழுக்கூட்டத்திலோ, அவர்கள் சார்பாககருத்துத் தெரிவித்து வருபவர்கள் வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதாக தனக்கு தெரியவில்லையென்றும் கூறிவிட்டார்.

இந்நிலையில் தான் வடமாகாண முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டியுள்ளது. எமது பிரச்சினைகள் பற்றி நாமாக முன்வந்து தீர்வுக்கான அழுத்தத்தை தெரிவிக்காத வரையில் நமக்காக யாரும் உதவ முன்வரப் போவதில்லை. மாறாக அவர்கள் முதலைக் கண்ணீரைத்தான் வடிக்கின்றனர். நாமும் ஏமாந்து கொண்டிருக்கின்றோம். எனவே எமது விடிவுக்காக நாம் ஒன்றுபட்டு செயற்பட முன்வரவேண்டும்.

நன்றி

ஆசிரியர்.

# நாட்டின் அபிவிருத்திக்கு முக்கிய தடைக்கல்லாக விளங்கும் சமகால யுத்தம்

பாக்கியராஜா ஜெயப்பிரபா

மொத்த சனத்தொகையில் 40 வீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஏதோ ஒரு வகையில் வறுமையின் கீழ் வாழ்ந்து வரும் பொழுது இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இவ்வாண்டில் சராசரியாக 7 வீதத்தினை எட்டியுள்ளது என மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கை கேள்விக்குறியாகவே உள்ளது. இன்று உலகின் வல்லரசாகக் கொள்ளப்படும் அமெரிக்காவின் விவசாயத்துறையில் மொத்த சனத்தொகையின் 4 வீதமான மக்கள் ஈடு பட்டு வரும் நிலையில் உணவு உற்பத்தியில் அந்நாடு தன்நிறைவு கண்டுள்ளது.

ஆனால் 34 வீத சனத்தொகையைக் கொண்ட இலங்கையின் விவசாயத்துறை உணவு உற்பத்தியில் தன்நிறைவு காண முடியாமல் உள்ளது. தாய்வான், கொரியா, சிங்கப்பூர், ஹொங்கொங் போன்ற நாடுகள் பாரிய கைத்தொழில் மய நாடுகள் எனும் அந்தஸ்தை எட்டும் முன்பே இலங்கைக்கு அதற்கான சாத்தியங்கள் இருந்தும் இலங்கை தற்பொழுதும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடாக விளங்குவதற்குக் காரணம் என்ன?

**(இலங்கையின் அபிவிருத்திக்கு தடைக்கற்களாக விளங்கும் காரணிகளில் மிகப் பிரதானமாக உள்ளது சமகால யுத்தமாகும்)** இது அபிவிருத்திக்கான அனைத்து கொள்கைகளுக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை செலுத்தி வருகின்றன. நாட்டின் சமூக, பொருளாதார அரசியல் காரணிகளை ஸ்திரமற்ற நிலைக்கு இட்டுச் செல்கின்றது.

எனவே விருத்திசெய்யப்பட்டிருந்த உட்கட்டுமானங்கள் அழிக்கப்பட்டதுடன் அதிகளவில் மனித வளமும் அழிக்கப்பட்டன. உதாரணமாக மாணவர்களது கல்வி நிலை வீழ்ச்சி கண்டதுடன் அதிகளவில் போராட்டத்தில் இளைஞர்கள் உள்வாங்கப்பட்டதால் எதிர்கால சமுதாயத்தினது ஸ்திரத்தன்மை கேள்விக்குறியாக்கப்பட்டது.

யுத்த பிரதேசத்தில் வாழ்ந்த மக்களது வாழ்க்கைத் தரம் வீழச்சி கண்டதுடன் அரசு அதிகளவு நிதியினை பாதுகாப்பு செலவிற்காக செலவிட வேண்டி இருந்தது. மக்களது நலச் சேவைகளுக்காகவும், நாட்டின் அபிவிருத்திக்கும் அரச நிதியினை பங்கிட முடியாமல் இருந்தது.

குறை உற்பத்தி, வெளிநாட்டு முதலீட்டு வீழ்ச்சி போன்ற நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எதிர்க்கணியத்திற்திற்கு இட்டுச் சென்றன. எனவே, உள்நாட்டு யுத்தமானது அபிவிருத்திக்கான பாரிய தடை என்பதில் ஐயமில்லை.

இலங்கையில் மட்டுமன்றி அனைத்து நாடுகளிலும் வறுமையானது அபிவிருத்திக்கான தடையாக இருந்து வருகின்றது. இரு தசாப்த காலமாக இடம் பெற்று வரும் யுத்தம், சூறாவளி, சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும் மக்கள் வரியவர்காளாக்கப்படுகின்றனர். அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய நிதி இவர்களது உணவிற்கும், பாதுகாப்பிற்கும், புனர்நிர்மாணத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

வறுமையானது கிராமப்புரம் சார்ந்த எண்ணக் கருவாகவே காணப்படுகின்றது. இலங்கையில் 33 வீதத்திற்கும் அதிகமான வறியவர்கள் கிராமப்புரங்களிலே வாழ்கின்றனர். சமமற்ற வருமானப் பங்கீடு இலங்கையில் பாரிய பிரச்சினையாக இருந்து வருகின்றது என்பதை வருமாக கினிகுணகம் 0.46 காட்டி நிற்கிறது.

மேல் மாகானம் மொத்த தேசிய உற்பத்தியில் 50 வீதத்திற்கும் அதிகளவில் பங்களிப்புச் செய்கின்றது. வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா போன்ற மாவட்டங்களில் 5 வீதத்திற்கும் குறைவாகவே பங்களிப்புச் செய்கின்றன.

அதிக எண்ணிக்கையிலான வர்தக நடவடிக்கைகள் மேல் மாகாணத்தில் செறிந்துள்ளதால் அங்குள்ள மக்கள் உயர் தொழில் வாய்ப்பையும் வருமானத்தையும் பெறக்கூடியதாக உள்ளது. எனவே பிரதேச ரீதியான சமத்துவமும் வினைத்திறனான வறுமை ஒழிப்புத் திட்டமும் அவசியமாகும்.

பண்டைய காலந்தொட்டு இலங்கையின் பிரதான ஜீவனோபாயத்துறையாக விவசாயத்துறை விளங்குகிறது. இத்துறையின் வளர்ச்சி மந்தகதியிலேயே செல்வதைக் காணலாம். இலங்கையை பொறுத்தவரைக்கும் 90 வீதத்திற்கும் அதிகமான ஏழைகள் கிராமிய விவசாயத்தில் தங்கியிருப்பதால் விவசாயத்துறையின் உற்பத்தித் திறன் வளர்ச்சி வறுமை ஒழித்தலில் முக்கிய பங்கெடுக்கிறது. துண்டாக்கப்பட்ட நிலப் பாவனை, நீர் வளப்பற்றாக்குறை, கடன், தொழிநுட்ப அறிவின்மை, சந்தைப் படுத்தல், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் போன்ற காரணிகள் இத்துறையின் உற்பத்தித் திறனை மேலும் மழுங்கடையச் செய்கின்றன. எனவே அபிவிருத்திப் பாதையில் உணவு உற்பத்தித் துறையின் பங்களிப்பு இன்றியமையாதது.

சமகால உணவுச்சந்தையின் தேவைக்கேற்ப இலங்கை தனது கைத்தொழில் உற்பத்தித் துறையை விருத்தி செய்ய வேண்டும். உயர் பெறுமதி கூடிய உள்நாட்டு வளங்களை பயன் படுத்தி உற்பத்தியை மேற்கொள்ளும் போது அது நாட்டிற்கு நன்மை அளிக்கும். மொத்த கைத்தொழில் ஏற்றுமதியில் 75 வீத்திற்கும் அதிகமான பங்கைக் கொண்டிருக்கும் ஆடைக் கைத்தொழில் துறை மிகவும் குறைந்த அளவிலேயே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்களிப்புச் செய்கின்றது.

இதற்குக் காரணம் இத்துறை அதிகளவில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களில் தங்கியிருத்தலாகும். எனவே சமகால போட்டிச் சந்தையில் நிலைத்து நிற்கக் கூடிய வகையில் சந்தையின் அளவைப் பெருக்குவதுடன் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். இறக்குமதி பிரதியீட்டை முற்றாக நீக்கி புதிய ஒப்பந்தங்களை ஏனைய உலக நாடுகளுடன் மேற்கொள்ளுவதனூடாக இலங்கை உற்பத்திகளை உலக சந்தை வரை கொண்டு செல்ல முடியும்.

இலங்கையின் அபிவிருத்திக்குத் தடையாக உள்ள மற்றுமொரு காரணி நேரடி வெளிநாட்டு முதலீட்டின் பின்னடைவாகும். அபிவிருத்திச் செயற்பாட்டின் வளர்ச்சிக்கு அத்திவாரமாக இருப்பது வெளிநாட்டு நேரடி முதலீடு மூலம் கிடைக்கும் முதலும் தொழிநுற்பமாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 28 வீத பங்களிப்புச் செலுத்தும் இலங்கையின் முதலீட்டில் 10 வீத்திற்கு வகை கூறும் நேரடி வெளிநாட்டு முதலீடானது மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 2-3 வீதமே பங்களிப்புச் செலுத்தி வருகின்றது.

ஆரம்ப காலந்தொட்டு இலங்கையின் முதலீடானது உள்நாட்டு தனியார் துறைகளில் தங்கியிருந்தது. இருப்பினும் உட்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறையும் சில சட்ட விதிமுறைச் சிக்கல்களினாலும் தனியார் முதலீடு பின்னடைந்துள்ள போது வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதனூடாக அதிகளவில் உள்ளூர் கூட்டிய கைத்தொழில் ஏற்றுமதி உற்பத்திகளில் ஈடுபடுவதுடன் உயர்தொழில் வாய்ப்பையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

மேலும் உயர் கல்வி தொழிநுட்ப பாவனையும் ஆய்வு மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய முறைகளில் பயன் பாடு உயர் வெளியீட்டு மட்டத்திற்கு இட்டுச் செல்லும்.

இலங்கையினது வர்த்தக சூழலானது வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு மிகவும் சாதகமாக விளங்குகின்றது. வெளிநாட்டு முதலீட்டின் பாதுகாப்பிற்கு இலங்கை அரசியல் அமைப்பு உத்தரவாதமளிப்பதுடன் தங்களது சம்பாத்தியத்தினை சொந்த நாட்டிற்கு எடுத்துச் செல்வதற்கு எந்தவெரு தடையுமில்லை. மேலும் இலங்கையானது 20 இற்கும் மேற்பட்ட நாடுகளுடன் முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளதுடன் 30 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இரட்டை வரிச் சலுகை வழங்குகிறது.

இலங்கை அரசானது முதலீட்டு பெருக்கத்தின் அவசியத்தினை உணர்ந்து சாதகமான பேரினப் பொருளாதார சூழலை உருவாக்குவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இலங்கை முதலீட்டு சபையானது மீள்கட்டமைக்கப்படுவதுடன் அதனது செயற்பாட்டை மேலும் பலப்படுத்தி வருகின்றது. எனவே நேரடி வெளிநாட்டு முதலீட்டை அதிகரிப்பது அபிவிருத்தி பாதையின் ஒரு படிக்கல்லாகும்.


கல்வியும் துறைசார் அறிவு விருத்தியும் அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லும். 2004 ஆம் ஆண்டு கல்வித்துறைக்கான பொதுச் செலவு மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 2 வீதத்தினால் குறைந்திருந்தது. இவ் வீழ்ச்சி கல்வி செயற்பாட்டின் போக்கிற்கு தடையாக காணப்படுகிறது. கல்விச் சேவையைப் பெற்றுக் கொள்வதில் பிரதேச சங்கங்களுக்கிடையே சமத்துவமற்ற தன்மை காணப்படுகின்றது.

அதிகளவான கிராமப்புற பாடசாலைகள் வெற்று வகுப்பறைகளைக் கொண்டிருக்க நகர்புற பாடசாலைகளில் வகுப்பறைகள் தளபாடங்களினால் நிரம்பி வழிகின்றன. எனவே இவ் இலவச் சேவையின் சமபங்கீடு அவசியமாகும். அதுமட்டுமன்றி தொழில்சார் அறிவை ஊக்குவிக்கும் முகமாக தொழில் பயிற்சி நிலையங்களை நிறுவுவதுடன் தகவல் தொழிநுற்ப-மையங்களினதும் உருவாக்கம் அவசியமாகும். புதிய கண்டு பிடிப்புக்களும், ஆய்வுகளும் நாட்டின் அபிவிருத்திக்கு மேலும் வலுவூட்டும்.

எனவே இலங்கையானது அபிவிருத்திக்கான பல்வேறு வாய்ப்புக்களை கொண்டிருந்த போதும் மேற்கூறப்பட்டது போன்ற பல சவால்கள் குறை அபிவிருத்தி நாடு எனும் நிலையிலிருந்து விடுபட




# யுத்த செலவீணம்



2007 ஆம் ஆண்டு தொடர்பான பாதுகாப்புச் செலவீணம் 139 மில்லியன் ரூபாய்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய நாளொன்றுக்கு 380 மில்லியன் ரூபாய்களும் மணித்தியால மொன்றுக்கு 15 மில்லியன் ரூபாய்களும் நிமிடமொன்றுக்கு சராசரியாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்களும் யுத்தத்திற்கு செலவிடப் படுகின்றன.

**நேசக்கரங்கள்**

சஞ்சிகைக்கு ஆய்வு ரீதியான கட்டுரைகள் எழுத்தாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

**நேசக்கரங்கள்**

சஞ்சிகைக்கு வாசகர்களிடமிருந்து ஆக்கபூர்வமான விமர்சனங்களும் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

# பிரிவு

சிறுகதை

உண்மைக் கதை

**எப். பாத்திமா ஸப்ரீனா**

ஸமீஹா தட்டிக் கதவை தள்ளிக் கொண்டு கொல்லைக்கு வந்தாள். பூமி இருளும், சாம்பலும் பூத்த போர்வைக்குள் கிடந்தது. மேகத்துள்ளே ஒளியுமிழ்கின்ற ஒற்றை நிலா. மேனியைச் சிலிர்க்க வைக்கின்ற சீதளக் காற்று. நிர்ச்சலனமாய் நிற்கின்ற மரங்கள். சலங்கை கட்டிக் கொண்ட பொண்ணாய் அருகிலே சப்திக்கின்ற மல்வத்து ஓயா!

ஸமீஹா கிணற்றடிக்குப் போனாள். வெறுமனே தோண்டப்பட்டு வாய் பிளந்திருந்த கிணறு. வானத்தைப் பார்த்தே நேரத்தை துள்ளியமாய்க் கணிக்கின்ற வயது ஸமீஹாவுக்கு அனுபவங்கள் புடம் போட்டுப் போட்டு ஆளாகி விட்ட அறுபது வயது மலர் அவள்.

இந்த அறுபது வருடங்களாய் அறிவு தெளிந்த காலந் தொட்டு சுப்ஹுப் பொழுதுகளில் அவள் கண்ணுறக்கம் கொண்டதில்லை. ஏனென்றால் அதிகாலையின்... குளிர்மையை ஊடுறுத்து வருகின்ற ஊர்ப்பள்ளி பாங்கோசை. அது உயிருக்குள் ஊடுறுவி உருக வைத்து உலுக்கும். பாங்கோசை கேட்காது அந்த ஊர்ப் பொழுதில் எந்த விடியலுமே நிகழ்ந்ததில்லை. அதிகாலை அதான் கேட்டு விழக்கின்ற அந்தப் "பொற்கேணி".....! அப்புறம் இயங்கத் தொடங்குகின்ற சுறு சுறுப்பு. அந்தப் "பொற்கேணி" கிராமத்தை அங்குலம் அங்குலமாய் நேசித்தவள் அவள். அந்தக் கிராமத்தின் காற்றின் அசைவை கணம் கணமும் ஸ்வாசித்தவள் அவள்.

அந்த மண்ணில் வாழும் சொந்தத்தை அவள் இப்போ இழந்து விட்டிருக்கின்றாள். அவள் மட்டுமென்ன அவள் சமூகமே இழந்திருக்கின்றது. இல்லையில்லை அந்த சந்ததியே இழந்து விடப் போகின்றது.

**இந்த மண் - அவள்**
**வந்த மண் -**
**அகதி என்ற பட்டத்தை தந்து அந்த**
**வட்டத்துக்குள் வாழச் சொன்ன**

"ம்..... நேரம் நாலரையாய் இருக்கும்...." ஸமீஹா நினைத்தாள். அப்படியானால் இன்னும் கொஞ்ச நேரத்தில் "சாரணந்தாப் பன்சலையில்" அதிகாலை ஆராதனை கேட்கும் அந்த ஓசை நாரகாசமாய்க் காதுகளின் நரம்புகளை கிழிக்கத் தொடங்கும். ஒரு மணித்தியாலயத்திற்கு மேலாய் ஓங்கி ஒலிக்கின்ற அந்த ஓங்கார நாதம் கேட்டாத்தான் இப்போ பிள்ளைகள் கண் விழிக்கக் கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். என்ன துர்ப்பாக்கியம்? எத்தகைய அவலம்? ஊரை விட்டுப் பிரிந்த இந்தப் பதினாறு வருடங்களாய் அவள் பாங்கோசை கேட்டு நிற்க வில்லை. அந்த நினைவு நெஞ்சை நெருப்பாய் சுட்ட போதெல்லாம் "அறுபட்ட கோழியாய்" உயிர் வாடிப் போவாள் ஸமீஹா. ஒரு வகைத் தவிப்பு எழுந்து சுயநினைவைப் போக்கடிக்கும். தாயைப் பிரிந்த ஏக்கத்தோடு உணர்வுகள் தடுமாறும்.

**என்**
**சொந்த மண்ணே!**
**நீ கூடப்**
**பிரிவின் கொடுமையில் விதவையாகிப்**
**போனாயா?**

சுவாசமாய் பிணைந்திருக்கின்ற மண்ணின் மணம் என் என்னை துறக்க மறுக்கின்றது? யா அல்லாஹ்...... எனக்கு மட்டும் தான் இந்த அவஸ்தையா? இல்லை மண்ணைப் பிரிந்த ஒவ்வொரு மனமும் இப்படித்தான் கணம், கணமும் செத்துச் செத்து பிழைக்கின்றதா? அவளுக்கு அது புரியவில்லை.

வுழுவை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் புகுந்தாள். குப்பி லாம்பின் ஒளியில் குடிசை நனைந்து கிடந்தது. அமைதியின் வெளியில் எல்லோருமே உறக்கத்தின் பிடியில் கிடந்தார்கள். முன்பெல்லாம் சுப்ஹை தொழுதுவிட்டு ஒரு "ஜுஸ்" ஓதிவிட்டுத் தான் கடமைகளைச் செய்யத் தொடங்குவாள் சமீஹா. இப்போது கூட வழமை மாதிரி ஓதுவதற்குத் தான் மனசு கிடந்து துடிக்கின்றது. ஆனால் பார்வைதான் ஒத்துழைக்க மறுக்கின்றது. ஓ.... இது கால மாற்றத்தின் பரிசு.... முதுமையின் விளைச்சல்களைக் கொண்ட தரிசு. தொழுது விட்டு எழுந்தாள்.

முஸல்லாவை மடித்துக் கொடியிலே போட்டு விட்டு கனவனைப் பார்த்தாள்.

கயிற்றுக் கட்டிலில் கணவன் கண்ணயர்ந்திருக்க..... காறையென்புக் கூடுகள் மேலே துருத்திக் கொண்டிருந்தன காச நோய்க் கிருமிகளின் துன்பியலைத் தாங்கிக் கொண்ட நெஞ்சுக் கூடு சீரற்று மேலும் கீழுமாக அசைந்து கொண்டிருந்தது.

இரவிரவாய் இருமிக் கிடந்தவருக்கு மகள் பாத்திமா தான் "சித்தாலேபே" போட்டு நீவி விட்டுக் கொண்டிருந்தாள். தலைமாட்டுக்கருகில் உட்கார்ந்து கொண்ட சமீஹா தெரிந்த ஆயத்துக்களையெல்லாம் ஓதி... ஓதி ஊதிக் கொண்டிருந்தாள்.

யாறப்பே! இவருட வருத்தத்த நீதான் நாயனே லேசாக்கோணும். இந்த அகதிகள கை விட்டுறாத அல்லாஹ்" கண்ணீரோடு மன்றாடினாள் சமீஹா... இப்படி எத்தனை எத்தனை இரவுகள். ஊரே உறங்கிக் கொண்டிருக்ககின்ற அந்த பொழுதுகளிலெல்லாம் ராஸீக்கின் இருமல் ஒலி அந்த குடிசையின் உயிர்களை துடிக்க வைக்கும்.

பரிவோடு தலையை தடவி விட்டாள் சமீஹா. உழைத்துழைத்து உரமேறிய உடல் இப்பே வெறுஞ்சருகாக கருகிக் கிடக்கின்றது.

"நையும் ஆகுலம் வாழ்வைத் தின்றிடும்" என்று ஆசாரக் கோவை கூறுகின்றதே. அப்பிடீன்னா வருத்துகின்ற கவலைகள் இவருட வாழ்வைத் தின்றிடுமோ என்ற நினைப்பு எழுந்த போதெல்லாம் மனசு மரணித்துப் போனது.

"யாறப்பே... இவருட ஹயாத்த நீதான் நீட்டிப் போடணும் அல்லாஹ்"

சமீஹா தேனீரைக் கலக்கிக் கொண்டு கயிற்றுக் கட்டிலுக்கருகில் வந்தாள். கனிவோடு கைகளைத் தொட்டாள். மெல்லப் பிரிந்தன கண்கள்.

".....ஏம்மா சுப்ஹு தொழுதிட்டீங்களா?" "ம்....ம்.... இந்தாங்க வாய் கழுவத் தண்ணீர்......... தேத்தண்ணியக் குடிங்க. நான் புள்ளயள எழுப்பிட்டு வர்றேன். இடியப்பமும் அவிக்கோணும்...."

"...... பாத்திமா இன்னும் எழும்பல்லியா.....? ராஸீக் கேட்டான்.

"......பாவம் புள்ள ராவு பண்ணண்டு ஒரு மணி வரைக்கும் ஒங்க நெஞ்சத் தடவி 'பாம்' பூசிக்கிட்டு இருந்தா....." "ம்.... சுப்ஹு களாவாயிருக்குமே சமீஹாம்மா.... புள்ளயள எழுப்புங்க....."
சரி நான் எழுப்பிட்டு வர்றேன். ஆற முதல் தேத்தண்ணிய குடிச்சிருங்கப்பா சுடச்சுட குடிச்சா தொண்டைக்கும் கொஞ்சம் சொகமாயிருக்குமில்லியா.......

".....பாத்திமா எழும்புங்க....மவ.... தங்கச்சியையும், தம்பியையும் எழுப்பி தொழுதுட்டு வாங்க கண்மணீ.... சோதினையும் நாளானனிக்காமே.... சோம்பலப் பார்க்காம....படிச்சா அல்லாஹ் மொகம் பார்ப்பான் இல்லியாம்மா.... தொழுதுட்டப் படிங்க. உம்மா இடியப்பம் அவிக்கணும்.... தேத்தண்ணீ ஊத்தி வச்சிருக்கேன் சீக்கிரம் நஸீம்மா....."

சின்னவள் கிழிந்த சீலைக்குள் கிடந்து சிணுங்கினாள்.

".....உம்மாவ்..... கொஞ்சமிருங்க. நான் தொழுதிட்டு வந்திர்றேன்.....இடியப்பத்தை அவிச்சிரலாம்....." பாத்திமா எழுந்து விட்டாள். அந்த குடிசை ராஜியத்தின் குட்டி இளவரசி அவள்.

வர்த்தகப் பிரிவில் கற்று உயர்தரப் பரீட்சை எழுதி விட்டு பல்கலைக் கழக நுழைவிற்காக கனவுகளோடு காத்திருப்பவள். வறுமை காலைச் சுற்றிச் சுற்றிப் பிண்ணிப் பிணைந்த போதும் பிடி கொடுக்காது படிப்பையே உயிர் மூச்செனக் கொண்டவள். தெரிந்தவர்களிடமெல்லாம் புத்தகங்களை இரவல் வாங்கி இரவிரவாப் படித்தவள். பறக்கின்ற பட்டாம்பூச்சி போல அப்படியொரு அழகும்.... அறிவும்.... அமோகமாய் அவளுக்கு வாய்த்திருக்கின்றன. பள்ளி வளவுக்குள் "அகதி" என்ற சொல் கொண்டு சுட்டுத் தள்ளப்பட்ட போதெல்லாம் தளராது எழுந்து நின்றவள். ஸமீஹாவின் ஈமானிய இதயம் மகள் பாத்திமாவை உருக்கி வார்த்து விட்டிருக்கின்றது.

பாத்திமாவின் மூத்த ராத்தாமார் இரண்டு பேரும் கல்யாணமாகி "அஸரிக்கம்" என்ற கிராமத்தில் இருக்கின்றார்கள். சமீஹா அந்தச் சுமைகளை இறக்கிய சுகத்தில் கொஞ்ச நாட்கள் நிம்மதியாகத்தான் இருந்தாள். ஆனாலும் கூட அது நீடிக்க வில்லை. அகதி வாழ்க்கையின் அவலங்கள் அத்தனை சீக்கிரத்தில் அவர்களை விட்டுப் போக இஸ்டப்படவில்லை. வறுமையே ஒவ்வொரு பக்கங்களிலும் வலை பின்னிற்று பெத்த வயிறு பற்றி எரிந்தது.

சின்னச் சின்னச் சண்டைக்கெல்லாம் மகள் பத்தீஹாவை வீட்டுக்கு அனுப்பி வைத்தான் மருமகன் சுல்தான். அந்தக் குடிசைக்குள் இனிப் பிடுங்க எதுவுமில்லை என்ற நிலையில் மீண்டும் அழைத்துப் போனான்.

நண்டுஞ், சீண்டுமாக அவன் குழந்தைகள் வயிற்றுக் கில்லாமல் வாடிய போதெல்லாம் சமீஹா உயிர் வரை உருகிப் போனாள்.

பிள்ளைகள் மூவரும் தேனீருக்காய் குந்தினார்கள் பாத்திமா அவர்களுக்கு ஆற்றிக் கொடுக்கின்றாள். இவள் வித்தியாசமானவள். எதையும் துணிவோடு எற்றுக் கொள்கிறாள்.

இப்போ குடிசை களை கட்டத் தொடங்கி விட்டது. காய்ந்த விறகுகளும் பளீரெனப் பற்றியெரியத் தொடங்கின. சுடர்க்கோளம் ஒளியை திரட்டிப் பார்க்கிற்று. எரிகின்ற அடுப்பின் முன்னாள் இன்னொரு விறகாக ஸமீஹா!

நெருப்பின் சூட்டை அவளது நெஞ்சின் சூடு தோற்கடித்தது. கொழுந்து விட்டெரிந்த தீ நாக்குகளில் அவள் கண்கள் நிலை குத்தி நின்றன. அவள் நெஞ்சுக்குள் இருந்த "பிரிவுத் தீ" நினைவை விழுங்கத் தொடங்கின்றது.

**அந்த மண் அவள்**
**சொந்த மண்**
**வாழ்வைத் தந்த மண்**
**வாசம் கொண்ட தங்க**
**மண்....**

நெஞ்சுக்குள்....புள்ளியாய்....புள்ளிகளாய் பரந்து, விரிந்து, எழுந்து விஸ்பரூபமாகி....., சோகமாய்ச் சுகமாய்.....துன்பமாய்.....இன்பமாய்..... நினைவில் மலரத் தொடங்கிற்று.

இடியப்ப வேலைகளை வெறுமனே கைகள் இயந்திர கதியில் இயங்கிக்கொண்டிருக்க நினைவச் சூட்டில் சமீஹாவின் "நெஞ்சம்" பொற்கேணிக் கிராமத்துக் குளிர்காயப் போயிற்று. கண்கள் தளும்பி வழிந்தன.

மன்னார் மாவட்டத்திலிருக்கின்ற "பொற்கேணிக்" கிராமம் பெயருக்கேற்ற பெருமையை கொண்டிருந்தது. நெய்தல் நிலத்து வெண் மணல் பொன்னைக் கொழித்தது. முஸ்லிம்களை பெருந்தொகையாகக் கொண்ட எழிற் கிராமம் எப்போதும் மணப்பெண்ணைப் போல மங்களகரமாய் ஜொலித்திற்று. நுங்கு தள்ளிய பணந் தோப்பு நிழலுக்குள் ஓடிக் களைக்கின்ற கிராமத்துச் சிறார்கள்.

சுறா, சூடை, சாளை, வேளா, நெண்டு, திருக்கை, கட்டா, ஓரா, கணவாய், கொடுவா, என்று அள்ளியள்ளித் தருகின்ற கடலன்னை. மெசின் போட்டுக்கள் ஓடித் திறிந்தன. எல்லாம் முஸ்லிம்களுக்குறியவை.

ஐந்து வேளையம் பாங்கொலி இதயத்தைத் திறக்கும் பால் பொழியும் நிலாப் பொழுதில் பயான் நடக்கும். அருமையாகப் புதையும் மணலில் புதைந்து கொண்டு இரவுகளில் இளசுகளின் அரட்டைகள் வெடிக்கும். வெண் நுரை பொங்கிக் கிடக்கின்ற வாவி பாலாகச் சிரிக்கும். சிறிசுகளும், பெரிசுகளுமாய் 'நுறையடி' மணக்கும் பொற்கேணியின் பொலிவு வார்த்தை வரம்புக்குள் அடங்காதது.

சாஹுலமீது போடியார் மட்டுந் தான் பொற்கேணியில் தானியக் கடை வைத்திருந்தார். மன்னார் மாவட்டத்திற்கு தானிய விநியோக ஏஜன்ட் அவர்.

ஆயிரக்கணக்கான மூட்டைகள் அடுக்கப்பட்ட வீடு.... போடியார் என்றால் பொற்கேணி மட்டுமென்ன தாராபுரம், மறிச்சுக் கட்டி என்று சூழ உள்ள கிராமங்களெல்லாம் பேர் சொல்லும்.

அவர் செல்வ மகள் சமீஹா. அவள் பிறந்து பதினைந்து வருடங்களில் கண்மூடினாள் மனைவி சுரைய்யா. அப்புறம் போடியார் சமீஹாவுக்காய் மட்டும் வாழ்ந்தார்.

அநாதையான ராஸிக்கை அரவணைத்து வளர்த்தார். நேர்மை, இறைநேசிப்பு கொண்ட ராஸிக்கை மருமகனாக்கி தானியக்கடையை ஒப்படைத்து விட்டு தள்ளாத வயதில் தான் ஒதுங்கிக் கொண்டார். சமீஹா வாப்பாவைத் தாங்கினாள்.

**அன்பு நிழலிலே**
**அமைதியான நீரோட்டமாய்**
**பொற்கேணியின்,**
**ஒவ்வொரு குடும்பமும் மகிழ்வையும், நிம்மதியையும் மட்டுமே சுகித்திருந்தது.**

பெருநாடகளும், திருநாட்களும், கந்தூரிகளும், கல்யாணங்களுமாய் அந்த மண் தினம் தினம் மணப்பெண்ணாய்த் தான் மகிழ்திருந்தது.

ராஸிக், ஸமீஹா இல்லறம் மகிழ்வை மணக்கின்ற கதம்பம். பள்ளிக்கு முன்னால் எழுந்த கல் வீடு அவர்களுடையது நல்லறத்தின் பொக்கிசங்களென பத்தீஹா, சுமைய்யா, பாத்திமா, சிறாஜ், நஸீமா.

மொட்டு மொட்டாய் வீட்டுக்குள் பட்டுச் சிறகு விரித்த பிள்ளை மல்லிகைகள் மயிலிறகாய் மனசை வருடுகின்ற அவர்களின் மழலைப் பேச்சுக்கள் "நான்கு பெண்களைப் பெற்று விட்டோம்" என்று ராஸிக் என்றுமே சலித்ததில்லை. மாறாக நிலா முகங்களைக்

கொஞ்சிக், கொஞ்சிப் பரவசப்பட்டான். இந்த பொற்கேணியின் மண் நானென்ன நாற்பதும் பெண்களாய்ப் பிறந்தால் கூட வாழ்விற்கும் வளம் கொடுக்கும்.... என்ற நம்பிக்கை அவனுக்கு.....

மார்கழி மாதத்து மழை நாளில் பதறிக் கொண்டு ஓடி வந்தான் ராஸிக்.

".....மாமா.....மாமா.....ஊர்கோடில உள்ள மின் கம்பத்தில நம்ம காஸிம் முதலாளிட ஜனாஸா கட்டப்பட்டிருக்காம். போர்ட்ட கடத்திட்டு ரண்டு லெச்சம் கேட்டானுவளாம்..... குடுக்கச் சொனங்கிருச்சு எண்டு அவர்ட கதைய முடிச்சுட்டானுவளாம்......" ராஸிக் குழைந்து போனான்.

வாழ்கையில் இறங்கிய முதலாவது இடியில் தாக்குண்ட சாஹூலமீது போடியார் சம்பவம் நடந்த இடத்திற்கு மருமகனோடு சேர்ந்தோடினார்.

கிராமம் சூழ்ந்திருக்க "லைட் போஸ்டின்" முதலாவது ஜனாஸா "துரோகி" என்ற பெயரோடு தொங்கிக் கொண்டிருந்தது. யா அல்லாஹ் என்ன கோரமான மௌத்து! இரத்தம் பீச்சியடிக்கப்பட்ட போஸ்ட் எல்லாம் அறிந்து மௌனித்திருந்தது.

அன்றோடு...... பொற்கேணியின் அழகு கலைக்கப்பட்டது, அச்சம் விதைக்கப்பட்டது.

ஊருக்குள் வெடிகுண்டுப் பொடியன்கள் சதா மரண பீதி கவ்விய முகங்கள். அச்சமும், பயமும் கலந்த அவசரப் பயணங்கள். எங்கும் எதுவும் நடக்கலாம் என்ற பதட்டம். மொத்ததில் கிராமம் அச்சத்தை மட்டுமே சூடியிருந்தன.

போட்டுகள் ஆங்காங்கே பறிக்கப்பட்ட சேதியும், கப்பம் கொடுத்து உயிர் வங்கிய சேதியும், அடிக்கடி காற்றுக்குள் ஏறின.

ரத்த வாடை பூசியதாய் தென்றள் உலாவிற்று. ஒரு வித இருக்கம். யுத்த பிரதேசத்துள் ஒன்றாக பொற்கேணி உள்வாங்கப்பட்ட கொடூரம்!!

ஒக்டோபர் மாதத்துப் பத்தாம் நாள். வடக்கு முஸ்லிம்களின் ஒவ்வொரு மனமும் உயிரில் ஆணி அறையப்பட்ட வேதனையில் உருக்குலைந்து சிதிலமாய்ப் போன நாள்.

அந்த மண் மக்களை கொடூரமாய் பிரிந்து அநாதையாக்கிப்போன நாள்.
எல்லா ஊரார்களைப் போலவே பொற்கேணி மரணித்துப் போயிற்று.

"இரண்டு மணித்தியாலயத்திற்குள் முஸ்லிம்கள் வெளியேறிட வேண்டும். அல்லது மட்டக்களப்பு படுகொலைகளை மன்னார் மண் ருசிக்கும்.

வீதியில் கூவித்திரிந்த வாகனங்கள். பேச்சு மொழி மறந்து போயிற்று. சன்னங்களின் மொழி பாசையாயிற்று. எதை எடுப்பது? எதை விடுவது..... எதுவுமே புரிய வில்லை உயிரை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள். உடமைகளை விட்டு விடுங்கள். போடியார் சாஹூலமீது புறப்படுவதாயில்லை.
அழுதார்கள், தொழுதார்கள்.

"வாப்பா நீங்க வரலேன்னா புள்ளைகளோட நானும் அவரும் இங்கேயே மௌத்தாப் போவோம்" அலறித்துடித்தாள் சமீஹா.

**வாழ்ந்த மண், வளர்ந்த வீடு**
**திரிந்த பாதைகள், கலந்த சுற்றம்**

இதையெல்லாம் விட்டு விட்டு எங்கே போவது? எப்படிப் போவது. புத்தி பேதலித்துப் போனது மாதிரி இருந்தது. கடைசியிலே உயிர் ஆசை வென்றது. கைக்குள் பொத்தப்பட்ட ஐயாயிரம். பள்ளிக்குப் போனான்...... ருாஸிக்!
**யா அல்லாஹ்..... ஒன்ட பள்ளிய நீ பார்த்துக்க றப்பே....**

மண்ணைக் குனிந்து முத்தமிட்டான். பரிதவிப்போடு ஒரு பிடி பள்ளி மண்ணை அள்ளி பாக்கெட்டில் பத்திரப் படுத்தினான்.
ஜன வெள்ளம் உயிரை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு புறப்படத் தயாராயிற்று.

**தாய் மண்ணே!**
**இனி**
**ஏப்போ உன்னை**
**தரிசிக்கப் போகிறோம்?**

ஒரு சமூகத்தின் சொத்துக்கள், பல சந்ததிக்குரிய உடமைகள் அநீதியாக சூறையாடப் பட்டுக் கொண்டிருந்தன. எல்லாம் பறிக்கப்பட்ட நிலையில் அகதிகளாக தன் மக்கள் ஓடுகின்ற அவலங்கண்டு சொந்த மண் ரத்தம் சிந்திற்று.
போடியார் சாஹூல் ஹமீது இடை நடுவில் இறந்து போனார் அவரைப் போல ஆறு ஜனாஸாக்கள். அடக்கம் செய்வதற்கு அனுமதி கிடைக்கவில்லை. ஆறு மையத்துக்களும் ஒரே பாயில் சுற்றப்பட்டு வன்னிப் பகுதியில் எங்கோ ஒரு காட்டுக்குள் எறியப்பட்ட கொடூரம்.
ஐந்து குஞ்சுகளையும் சிறகுக்குள் பொத்திக் கொண்ட சமீஹா பித்துப் பிடித்தவளாய் பேச்சற்று இருந்தாள்.

கற்பிற்டி, விடத்தல் தீவு வழியாக தண்டிக்குளம் இராணுவ முகாம் வந்து லொறிகள் மூலமாய் ஆடு,மாடுகள் போன்று அடைக்கப்பட்ட நிலையில் மக்கள், அகதி மக்கள், மண்ணைத் துறந்த மக்கள், மனசால் இறந்த மக்கள்...... கலங்கித் தவித்தவர்களாக சாரி சாரியாக வந்து குவிந்து கொண்டிருந்தார்கள்.

அந்த ஐந்து நாட்களாய் அடைந்த அவலம். யா அல்லாஹ்..... அவை வார்த்தைகளுள் அடங்காச் சோகம். சோகம்.....சோகம்......சோகம்..... தவிர வேறில்லை.

மதவாச்சியிலே ஆலமரத்தடியின் கீழ் ஆயிரம் குடும்பங்கள் அநாதரவாய் நின்ற போதுதான் எல்லாம் நிஜம் என்பதை ராஸிக் உணர்ந்தான்.

**ஐந்து நாட்களாகி விட்டதா?**
**ஏன்**
**தாய் மண்ணே.......**
**நீ மௌனித்துப் போனாயா**
**இல்லை**
**மரணித்துப் போனாயா.....**

ஐந்து நாட்களின் பயணம்... யா அல்லாஹ் ஒரு நாட்டுக்குள் இருந்து கொண்டு ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு பயனிக்க ஐந்து நாட்கள்.

கடந்த ஐந்து நாட்களுக்குள்ளும் எத்தனை வகைச் சோகங்கள்? எத்தை வகை அவலங்கள். மூன்றாம் நாள் நடந்த அந்தக் கொடூரம்!!

நினைக்கையில் ரோமக் கால்கள் குத்திட்டு நின்றன. உயிர் நடுங்கிற்று.

எருக்கலம் பிட்டியிலிருந்து விடத்தல் தீவுக்கு படகுப் பயணம்......

எல்லா முகங்களிலும் உயிர் தப்ப வேண்டிய வேட்கை. கடற் கரை கண்ணீர் கரையாக மாறிக் கொண்டிருந்தது.

நெருக்கியடிக்கும் மனிதரிடை கதறித் துடிக்கும் பாலகர்கள்.

அந்தத் தாய்.....
கைக்குழந்தையை இறுக்கிக் கொண்டிருந்தாள்.

படகு கர்ப்பிணித் தாய் போல் பிதிங்கிற்று.
ஒரு கணம்....... ஒரே கணம்.
மரத்துக் கிடந்த தாயின் கரங்களிலிருந்து நழுவி கடலுள் அமிழ்ந்தது குழந்தை.
"ஏன்ட புள்ள........!!"
உயிர் கிழியக் கத்திய தாய் உணர்வற்றுப் படகுக்குள் வீழ்ந்தாள்.

படகு அவசரமாய்ப் பயணித்தது. ஒரு சிற்றுயிருக்காய்த் தரிக்க அதற்கென்ன பைத்தியமா?
நெஞ்சங்கள் நெக்குருகின.

அகதி முகாம் வாழ்க்கையை அனுசரித்துப் போனார்கள். அவனைப் போல ஆயிரம் ராஸிக்குகள்! வருடம் நில்லாது ஓடிற்று. முகாம் வாழ்க்கை துறக்க வேண்டியா நிர்ப்பந்தம். ராஸிக் மதவாச்சி வீதிகளிலே வேலை தேடி அலைந்தான்.

ஒரு நொடிக்குள் கலைந்த சொகுசு வாழ்க்கை நாட்டாமை வேலையைத் தந்தது.

சாஹுலமீது போடியாரின் மருமகன் மதவாச்சி மண்ணிலே ஒரு மூட்டை தூக்கி அவலங்கள் கழுத்தை நெறித்தன. பருவத்து வாயிலிலே நிற்கின்ற அவனது குமறுகள் "யா அல்லாஹ்..... இவங்கள எப்பிடி கரையேத்தப் போறேன்." உள்ளுக்குள் அழுதான். வெளியில் சிரித்தான்.

சமீஹா பேச்சற்றுப் போனாள் அகதிகளுக் கென்று ஏதோ தந்தார்கள். வந்தார்கள்,போனார்கள். துயரம் மட்டும் துடைக்கப்படவேயில்லை. மதவாச்சியில் மூன்று வருடங்கள். பின்னர்....

தெரிந்த ஒருவருடைய தோட்டப் பகுதி இல்லையில்லை காட்டுப் பகுதி ஒன்று அனுராதபுரியில் கிடைத்தது. ராஸிக் உழைத்தான். குடிசை உருவாயிற்று. மற்றவர்களைப் போல இயல்பு நிலைக்குத் திரும்ப 5 வருடங்கள் பிடித்திருக்கின்றது. சமீஹாவும் கூலி வேலைக்குப் போனாள், இடியப்பம் அவிற்று விற்றாள். மூத்தவர்களிருவரும் கல்யாணமாகிப் போன கையோடு ராஸிக் படுக்கையில் விழுந்தான்.

உள்ளுக்குள் அரித்திருக்கின்றது மண்ணின் பிரிவு. செல்லரித்துப் போன விருட்சமாய் ராஸிக் விழுந்தான். காச நோய் கிருமிகளின் நேசிப்பு. ராஸிக்கை இப்போ ரணப் படுத்திக் கொண்டிருக்கின்றது.

யா அல்லாஹ்! 16 வருடங்கள். அகதி வாழ்க்கைப் பாதையிற் பயணித்து இப்போ 16 வருடங்கள். அகதிப் பட்டம் வாங்கி அவலம் சுமந்து வருசம் 16ப் போச்சா?

நொருப்பின் துகள் தெறித்து கரத்தை சுட்டது. "என்னம்மா இப்புடி விறைச்சுப் போயி குந்திகிட்டிருக்கீங்க. என்ன மறுபடி, மறு படி ஊரு நெனப்பா....?

வேணாம்மா.... மறந்துருங்க. இன்ஷா அல்லாஹ் எனக்கும் ஏதாவது டீச்சிங் கெடக்கும்.

அப்பவாவது நம்ம கஸ்டம் நீங்காமலா போப் போவுது" பாத்திமா ஆறுதல் சொல்ல,

"கஷ்டம் என்னிக்காவது நீங்கத்தாம்மா போவுது. ஆனா பதினொரு வருடங்களுக்கு முன்னால இதே மாதிரி ஒரு மாசத்துல பத்தாம் தேதில மனசுல பட்டுச்சே காயம்! அது நீங்காது மவ..... அது புண்ணாகி, புரையோடி..... ரண களமாய் வேதனை தரும்மா..... அதுல என்னோட மௌத்து வரைக்கும் ரத்தம் வரும்மா....." குளறி விம்மி, விம்மி அழத் தொடங்கினாள் சமீஹா.......

ஆற்ற முடியாத அந்தச் சோகத்தை, தேற்ற முடியாத அந்தக் காயத்தைக் கொண்ட உம்மாவை அரவணைத்து பரிவோடு தடவினாள்....... பாத்திமா.

"உம்மா என்னிக்காவது இந்த அநீதிக்கு...... நீதி கெடக்கத்தான் போவுது......" அல்லாஹ் கிட்ட.....

அடுப்புத் தீ இன்னும் பற்றியெரிந்து கொண்டுதான் இருந்தது.

(யாவும் உண்மை)

## இடம் பெயர்ந்தோர் குறித்த விபரத்தைப் பெற ஐ.சி.ஆர்.சி யால் இணையத்தளம் ஆரம்பம்

இடம் பெயர்ந்துள்ளவர்களின் பெயர் விபரங்களை உள்ளூரிலும் சர்வதேவ ரீதியிலும் பெற்றுக்கொள்ளும் முகமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இணையத்தளமொன்றை ஆரம்பித்துள்ளது.

வடக்கு, கிழக்கில் தொடரும் மோதல் காரணமாக உறவினர்களுடன் தொடர்பு கொள்ள முடியாதவர்களுக்கே இந்த இணையத்தளம் ஆரப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் இணையத்தள முகவரி www.familylinks.icrcorg என்பதாகும்.

மோதல் இடம் பெறும் பகுதி மக்கள் தமது உறவினர்களுக்கு தமது நிலைமை குறித்து தெரியப்படுத்தலாம் என்று ஐ.சி.ஆர்.சி தெரிவித்துள்ளது.

## பழையதும் புதியதும்

"அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை நிரந்தர எதிரியும் இல்லை.இன்றைய நண்பன் நாளைய எதிரி நாளைய எதிரி இன்றைய நண்பன் இதுதான் அரசியல்" இது பழைய அரசியல் கூற்று.

"அரசியலில் நிரந்தரக் கொள்ளையும் இல்லை, சந்தர்பத்திற்கேற்ப கட்சி மாறுவதும் அணிதிரள்வதும் தான் அரசியல்" இது புதிய அரசியல் கூற்று.

## வடமாகாண முஸ்லிம்களின் ஆவணக்காப்பகம்

வடமாகான முஸ்லிம்கள் பற்றியதகவல் களோ ஆவணங்களோ இது வரை முறையாகச் சேகரித்து வைக்கப்படவில்லை. வடக்கு முஸ்லி ம்களின் பலவந்த வெளியேற்றம் கோரச் சம்ப வங்கள் நிகழ்ந்து 16 வருடங்கள் நிறைவெய்து -கின்ற இந்த சூழ்நிலையில் நமது எதிர் காலம் குறித்து மிகக் கவனமாகச் சிந்தித்து ஆக்கபூர்வ மான நடவடிக்கைகளில் இறங்க வேண்டியுள்ளது.

இவைபற்றிய தகவல்கள், புகைப்படங்கள், துண்டுப்பிரசுரங்கள், கடிதங்கள, நூல்கள், வெளியீடுகள், ஒலிப்பதிவு நாடாக்கள், பத்திரிகை நறுக்குகள், ஆய்வு, கலந்துரையாடல்கள் குறிப்பு பிரசுரிக்கப்படாத ஆய்வுக் கட்டுரைகள், புவித்தோ -ற்ற வரைபடங்கள், ஆதாரபூர்வமான வாய்வழித் தகவல்களின் எழுத்து வடிவங்கள், சுவடிகள் போன்றவற்றை நாம் சேகரிக்க எண்ணியுள்ளோம்.


எனவே ஆர்வலர்கள் இதில் கூடிய சிரத்தை எடுத்து முடியுமானவற்றை எமக்கு அனுப்பி வைக்குமாறும் அவை பற்றிய தகவல்களைப் பெறக்கூடிய வழிகளை அறிவிக்குமாறும் அன்புடன் வேண்டுகிறோம். இது பற்றிய உங்களது மேலதிக ஆலோசனைகளையும் வரவேற்கின்றோம்.

**மக்கள் பணிமனை**

ஆவணக்காப்பகப் பிரிவு

இல. 07, முப்பது வீட்டுத் திட்ட வீதி, தில்லையடி, புத்தளம்.

# சமாதானத் தூது



மானிட வர்க்கம் மாண்டு போவதற்கு வழி கோலுகிறது. ஆயுதங்கள் சேகரிப்பதில் போட்டி போடுகின்றார்கள். ஆயுதங்கள் அவர்களையே பூண்டோடு அழிக்கப் போகின்றன. நியூக்கிலிய அணு ஆயுதங்கள் அழிவு விபரிக்க முடியாதது லேசர் கதில் துவக்குகளை விண்வெளியில் குவிக்க திட்டமிட்டுள்ளார்கள்.

நோய் வாய்ப்பட்ட சிங்கம், தான் மிருகங்களின் அரசன் என்ற வகையில் எல்லா வனவாசிகளையும் கடல்வாசிகளையும் காலஞ்சென்ற தகப்பனாரின் கடற்கரையிலுள்ள ஞாபக குகைக்கு அழைத்தது. காலில் பந்தம் வேதனை என்றாலும் பிரச்சினை முத்தி விடும். இடியப்பச்சிக்ககலாகி விடும் என்ற காரணத்திற்காக அவசர அழைப்பை விட்டது.

அழைக்கப்பட்ட அனைத்தும் சிங்கராசாவின் நிலை கண்டு கலங்கி நின்றன. அன்பர்களே! பாரதூரமான ஒரு கட்டத்தை அடைந்துள்ளோம். நாம் மதிக்கின்ற மக்கள் ஆறாவது அறிவு அவர்களுக்கு ஆசிர்வாதமா? அல்லது சாபமா? என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டியவர்கள்.

ஆனால் எமக்கு பிரச்சனையாக மாறி வருகிறார்கள். ஒரு மனிதனின் மிருகத் தனமான செயலால் எனது காலில் குண்டு பாய்ந்துள்ளது. அவர்கள் எங்கள் இனத்தை பூண்டோடு அழிக்க கங்கணம் கட்டி நிற்கிறார்கள். எமது இனத்தில் பலர் அற்றுப் போய் விட்டார்கள். எங்களுக்கும் அதே கதிதானே? நாம் பாதுகாப்பு நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்று சிங்கம் கர்ச்சித்தது.

அவர்களுள் ஒரு முதியவர் பேசத் தொடங்கினார். அவசரம் புத்தி மத்திமம். அவர்கள் ஆயுதங்களை குவிக்கிறார்கள். அவர்கள் எங்கள் சகோதரர்களில் சிலரைக் கொன்று பாய்க்குகளாகவும் மணிபேசுகளாகவும் மாற்றி வைத்திருக்கிறார்கள்.

சீலாமீன் சீறி எழுந்தது. கடலில் ஆயிரக்கணக்கில் மீன்பிடி வள்ளங்கள். ஆறுகளில் எமது சகோதரர்கள் எப்படி கஷ்டப்படுகிறார்களோ தெரியாது.

பெருமூச்சுடன் எழும்பியது மனிதக் குரங்கு மிருகச் சாலையில் உள்ள எமது இனம் வாழலாம். மற்றவர்களின் நிலை நினைக்கவே பயமாக இருக்கின்றது.

முதலை பற்களைக் காட்டிய படி பேச ஆரம்பித்தது. மானிட வர்க்கத்திற்கு எங்களை அழிப்பதில் ஒரு இன்பம். ஆனால் எங்களுக்காக பரிந்து பேசுவார்கள். மாநாடுகளில் இயற்கை உயிரினங்கள் ஆகியவற்றின் பாதுகாப்புப் பற்றி நீண்ட நேரம் விவாதிப்பார்கள். முயல் முனங்கியது. நாங்கள் அவர்களின் மூத்த சகோதரர்கள் என்பதை வசதியாக மறைக்கிறார்களே.

நாய் அமைதியை நிலை நாட்டியது. சிங்கம் சினத்துடன் கர்ச்சித்தது. துரோகியே உன் அமைதியின் மர்மம் யாது? மாட்சிமை தாங்கிய மன்னர் பிரானே துரோகி எனக் கூறாதீர்கள். நான் அவர்களுடன் விரும்பி வாழ வில்லை.ஆனால் எமது மூதாரதயர் அவர்களால் வளர்க்கப்பட்டவர்கள். அரவணைத்தார்கள். ஆனால் இன்று மனிதர் அழகான நாய்களை மாத்திரம் தேடி வளர்க்கின்றனர். எங்களுக்கு உணவும் சரியாக கொடுப்பதில்லை. சில வேளை அடியும் உதையும் தான். நாய் கண்ணீரைத் துடைத்து விட்டு மீண்டும் பேசியது. அன்பான தோழர்கலே ஏன் அவசரப்பட்டு அவர்கள் மீது குற்றத்தைச் சுமத்துகிரீர்கள்? இவ்வளவு காலமும் எங்களை வாழ விட்டார்களே. கனவான்களே எனக்குப் பேசுவதற்கு அனுமதி வழங்கியள்ளீர்கள். ஆனால் மனிதர்கள் அழிவுப் பதையில் செல்கிறார்கள் என்பதை எப்படிச் சொல்லுகிறீர்? சபையில் இருந்து ஒரு குரல்.

நியூக்கிலிய அணு ஆயுதங்களின் அழிவு விபரிக்க முடியாதது. லேசர் கதிர் துவக்குகளை வின்வெளியில் குவிக்க திட்டமிடுகிறார்கள். மீன்களே நீங்கள் கடலின் அடிப்பாகத்திற்குச் சென்று தப்பலாம். பாம்புகளும், மற்றவைகளும் அடர்த்தியான காடுகளில் தங்களை பாதுகாத்துக் கொள்ளலாம். மனிதன் எங்கே போவது? எங்கே ஒளிக்கலாம்? எல்லோரும் சிந்திக்கத் தொடங்கினர்.

ஓநாய் மனிதன் எமது எதிரிதான். ஆனால் அவன் உயிருள்ள பிராணியாச்சே யானை ஆம் மனிதன் கருணையும் உடையவன். ஆவனுடன்

அனைந்து வாழலாம்.

சிங்க மகாராஜா தனது காலில் துவக்கால் சுட்ட புண் ஆறாத நிலையிலும் பேசியது. அன்பர்களே மனித வர்க்கம் தாமாகவே தங்களை அழித்துக் கொள்வார்கள் என்று எல்லோரும் கருதுகிறீர்கள்.

ஆம் மகாராசாவே அவர்களை காப்பாற்ற வேண்டும். இது நாயின் குரல் ஆம், நாம் நீதி நியாயத்துக்கு தர்மத்துககு கட்டுப்பட்டவர்கள் இது ஏகோபித்தக் குரல்.

அது அவர்களுக்கு விளங்க வேண்டுமே? நரி நாசுக்காக் கூறியது. நரியை தூதராக அனுப்பினால்
கரடி கூறியது.

ஐயகோ என்னால் முடியாது. அவர்களைத் திருப்தி அடையச் செய்ய முடியாது. நரி கூறுவதில் கருத்து இருக்கும். எனக்குப் புரியவில்லை. இன்று நாம் எடுத்த தீர்மானத்தை அனுப்புவோம். அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்றது கரடி செய்தியை முயலுடன் சென்று தலைவனாகிய சிந்தனை மனிதனிடம் கொடுக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. கூட்டம் இனிது

பூ.க. இராசரத்தினம்

## நாம் பிறருக்காக வாழ வேண்டும்

ஆற்று நீர் எப்போதும்
ஓடிக்கொண்டிருக்க்கிறது. ஆனால் ஆற்று நீர் ஆற்றுக்குப் பயன்படாமல் பிறருக்கு பயன்படுகிறது.

மரம் பழங்களையும் நிழலையும் தருகின்றது. ஆனால் பழங்களை அந்த மரம் உண்பதில்லை. அதன் நிழலும் அதற்குப் பயன்படுவதில்லை. பிறருக்காகப் பழங்களையும், நிழலையும் தருகின்றது. பசு பாலைத் தருகிறது. ஆனால் காலை அது பருகுவதில்லை. பிறருக்குப்பாலைக் கொடுத்து உதவுகிறது.

ஆற்று நீர், மரம், பசு ஆகியவைகள் நமக்காக புகட்டும் பாடம் நாம் பிறருக்காக வாழவேண்டும் என்பதே பிறருக்குப் பயன்படுவதில்தான் நாம் வாழ்வின் சிறப்பு பெருகின்றது.

*-சத்திய சாயி பாபா-*

## போர்த்திகேயர் படையினரால் யாழில் தமிழ் மண்ணுக்காக சிரச் சேதம் செய்யப்பட்ட முஸ்லிம்கள்

அக்காலகட்டத்தில் இன்றைய நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அமைந்துள்ள குருக்கள் வளவு என்றவிடத்தில் முஸ்லிம்கள் குடியேறியிருந்தார்கள் என அறியப்படுகிறது.

அக்காலத்தில் கந்த சாய்பு என்பவரால் முகம்மது மார்க்கத்தவர்களாக்கப்பட்ட தமிழ் வம்சத்தவர்களான சில சோனக குடிகள் காயல் பட்டணம் முதலிய இடங்களிலிருந்து வந்து தென்மிருசுவில் என்னும் ஊரில் குடியிருந்து சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், முகாவில் எனுமிடங்களிலுள்ள சந்தைகளில் வியாபாரம் பண்ணிக் கொண்டு தாங்களிருந்ததென மிருசுவில்லுக்கு உசனென்று பேருமிட்டனர். சில காலம் அவ்விடத்திலிருந்து இவ்விடம் வசதிப்படாததினால் அந்தச் சோனகக் குடிகள் அவ்விடத்தை விட்டு நல்லூரிற் கந்தசுவாமி கோயிலிருந்த இடத்தில் குடியிருந்தார்கள். (யாழ்ப்பாணம் வைபவமாலை)

சோனகர் உசனின்று மகன்று சோனகன் புலவில் சிறிது காலம் வைகி, அதுவும் வாய்ப்பாகாமையால், இப்போது நல்லூர் கந்தசுவாமி கோவிலிருக்குமிடத்திற்கு மேல் பாகத்தில் குடி கொண்டார்கள் அங்கே ஒரு பள்ளிவாசலுங் கட்டினார்கள். (ஆ. முத்துத் தம்பிப் பிள்ளை 1933) கோயிலின் அயலிலே மேற்குத்திசையாக சில காலத்திற்கு முன் மசூதியொன்றிருந்ததாகத் தெரிகின்றது.

(வி. சிவசாமி 1976) கி.பி. 1560 ஆம் ஆண்டு கொன்ஸ்தாந்தினூடி பிறகன்ஸா யாழ்ப்பாணத்தில் மீது படையெடுத்தபோது, பறங்கிகளுக்கு எதிராக தமிழர் படையிலுள்ள வடக்கரும் சோனகரும் போராடினர். (ஞானரிரகாசர் 1928) கி.பி. 1591ல் யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்ட அந்திரே பூர்த்தாடு, மீண்டும் கலகம் விளைவிக்க கூடியவர்களென எண்ணமிட்ட எண்ணூறு வடக்கரையும் சில சோனகரையும் சிரசேதஞ் செய்துள்ளான். (சே. இராசநாயகம் 1933) மேலும் கரையிறங்கிய பறங்கிப்படை, இவ்விடத்திற்கண்மையிலிருந்த சோனகரின் வர்த்தக சாலைகளைக் கண்டு, அவைகளுட் புகுந்து 10.000 கண்டி நெல்லையும், 400 கண்டி அரிசியையும் வாரிக் கொண்டு போயினர். (சே. இராசநாயகம் 1933) இவற்றிலிருந்து நல்லூரில் சில சோனகக் குடிகள் வசித்து வந்தனர் எனத் துணியலாம்.

# வடபுல முஸ்லிம்களின் வாழ்வுரிமையைப் பாதுகாப்பதற்கான மாநாடு

வடபகுதியிலிருந்து முஸ்லீம்கள் 1990ம் ஆண்டு அக்டோபர் மாதம் வெளியேற்றப்பட்டார்கள். அன்றிலிருந்து இன்று வரை என் வெளியேற்றப்பட்டோம் என்ற வினாவுக்கு எநத வொரு இடம் பெயர்ந்த முஸ்லீமானாலும் பதில் கூற முடியாத அளவிற்கு அவர்களது வெளியேற்றம் இடம் பெற்றுள்ளது.

புத்தளம் தில்லையடியில் அமைந்துள்ள மக்கள் பணிமனையின் தலைவர் காதிநீதிபதியுமான மௌலவி பீ.ஏ.எஸ். சுபியான் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை (16-12-2006) புத்தளம் மர்ஹூம் பிஸ்ருல் ஹாபி ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெற்ற வடபுல முஸ்லீம்களின் வாழ்கை நிலைமையை பாதுகாக்கும் மகா நாட்டுக்கு தலைமை வகித்து உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இம் மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பல பிரதிகள் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலான இடம் பெயர்ந்த மக்களும் கலந்து கொண்டனர்.

மௌலவி பீ.ஏ.எஸ் சுபியான் தனதுரையில் மேலும் கூறியதாவது.

1990ம் ஆண்டுக்கு முன்னர் வடபகுதியிலுள்ள ஐந்து மாவட்டங்களில் சுமார் 83 கிராமங்களில் ஆயிரம் ஆண்டு பாரம் பரிய சம்பிரதாய சரித்திரத்துடன் வாழ்ந்து வந்த எம்மை 1990ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒரு சில மணித்தியால அவகாசத்துக்குள் எமது தாயக பூமியை விட்டும் வெளியேற்றப்பட்டோம்.

வெளியேற்றப்பட்ட தினத்திலிருந்து எமக்கு ஏற்பட்ட பிரச்சினை ஆண்டுகள் 16 கழிந்து விட்ட போதிலும் இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவேவுள்ளது. இச்சமயம் எமது பிரச்சினைகள் மறுக்கப்பட்ட மறக்கப்பட்ட பிரச்சினையாகி விட்டது. எமது வாழ்வு நீண்ட காலமாக அகதி வாழ்வாகவே அமைந்து விட்டது.

இலங்கையிலுள்ள பல அரசியல் கட்சிகளுக்கு எமது வெளியேற்றம் பற்றி இன்று கூட சரியான முறையில் அறிந்து கொள்ளாமல் இருக்கின்றார்கள். இதன் காரணமாகவே இன்று நாம் பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை இங்கு அழைத்து எமது பிரச்சினைகளை தெளிவு படுத்தியுள்ளளோம்.அவர்களது விளக்கங்களையும் நாம் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம்! என்றார்.

**தம்மிக்க அசோகா சுலீர (தேசிய அபிவிருத்தி முன்னனி)**

முன்னைய ஆட்சிக் காலத்தில் பல அரசியல் தலைவர்களும் பல ஒப்பந்தங்கள் ஏற்பட்ட போதிலும் அவை ஒன்றும் இனப்பிரச்சனையைத் தீர்த்து வைக்கவில்லை.

இரு பிரதான அரசியல் கட்சிகளும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் எவ்வித நாட்டமும் கிடையாது.

மேலும் ஜே.வீ.பி மற்றும் ஹெல உறுமய போன்ற கட்சிகள் எந்த வகையிலும் ஆதரவு தராது.

எம்மிடம் இன, மத, பேதங்கள் எதுவும் கிடையாது. இம் மக்களின் பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்பட வேண்டும். எமக்கு யுத்தம் வேண்டாம். அரசியல் தீர்வே வேண்டும்! என்றார்.

**ஐ. தடசனா மூர்த்தி (ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பீ.டி.பீ)**

1990ம் ஆண்டு அக்டோபர் மாதம் வடமாகாணத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த முஸ்லீம்களை புலிகள் வெளியேற்றிய நிகழ்வானது என்றுமே மன்னிக்க முடியாத பேரவலம் நிறைந்த சம்பவமாகும்.

முஸ்லிம் மக்களின் சில அரசியல் தலைவர்கள் புலித் தலைமையால் வட மாகாண முஸ்லீம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்து குரல் கொடுக்கத் தயங்கிய போது இந்த மோசமான அநீதியை உலகறிய செய்தவர்கள் நாங்கள் தான்.

புத்தளம் மாவட்டத்திலும் வெளி மாவட்டங்களிலும் வாழ்கின்ற வட மாகாண முஸ்லீம் மக்களுக்கு எம்மால் முடிந்த பங்களிப்புகளை தொடர்ச்சியாக வழங்கி வருகிறோம்.

உங்களது துயரத்தை நாங்கள் அதிகமாக உணரக் கூடியதாக இருப்பதற்கான காரணம் புலி பாசிசத்தால் நீங்கள் அனுபவித்த வாழ்வை 1985லிருந்து கொண்டு வரும் மக்களின் பிரதிநிதிகளாக நாங்களும் இருப்பதால் தான்! என்றார்.

**மாவை: எஸ். சேனாதி ராஜா (தமிழரசுக் கட்சி)**

இடம் பெயர்ந்துள்ள முஸ்லிம் மக்களின் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். 16 வருடங்களுக்கு முன்பு இடம் பெற்ற இந்த துயர நிகழ்ச்சியை யொட்டி எமது கட்சி மனம் வருந்தியது. அதற்காக மன்னிப்பும் கேட்டோம்.

16 ஆண்டுகளுக்கு முன்பு முஸ்லிம்கள் வடபகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டது எக் காரணம் கொண்டும் நியாயம் என்று கூற மாட்டேன். இவர்களை திரும்பவும் உடனடியாக யாழ் மண்ணுக்கு அழைத்துச் செல்வோம் என்று உறுதிபடக் கூற முடியாது.

நீங்கள் மறுபடியும் யாழ் மண்ணுக்கு சென்று வாழ விரும்பின் பூரணமான அரசியல் தீர்வொன்றின் பின்னரே செல்வது சாத்தியமாகும்! என்றார்.

**செமிஸ் ஜெய ரெக்கு (இடது சாரி முன்னனி) (ஜனாதிபதி வேட்பாளர்)**

இன்று சிறுபான்மையினருக்கு பல் வேறு விதத்திலும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது. வடக்கே ஏ-9 பாதை மூடப்பட்டுள்ளது. இதனால் வடக்கு மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர் கொள்கின்றனர். கிழக்கில் வாகரைப் பிரதேசத்திலும் பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

நாட்டுக்குள்ளும் ஏகப்பட்டப் பிரச்சினைகள். சுமார் 2000 பேருக்கு மேழ் காணாமல் போய்விட்டனர்.

ஏன் இப்படியான பிரச்சினைகள் சிறுபான்மை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இன்று இனவாதம் தலைதுக்கியுள்ளது. ஜனாதிபதி இனவாத சக்கிகளுக்குள் புகுந்துள்ளார். அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்படல் வேண்டும். இதில் முஸ்லிம்களின் பிரச்சினைகளும் உள்வாங்கப்படல் வேண்டும்.யுத்தம் நிறுத்தப்படல் வேண்டும். அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். சிறுபான்மை மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும்! என்றார்.

**சிரர்ங்க ஜய சூரிய (ஐக்கிய சோஷலிஸ முன்னனி)**

இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினை இன்று பெறும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

தற்பொழுது இடம் பெறும் யுத்தம் காரணமாக சுமார் 2 இலச்சத்து 65 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

யுத்தம் காரணமாக இலங்கை முழுவதும் பாரிய பிரச்சிணை ஏற்பட்டுள்ளது. அமைதியும், நிம்மதியும் பெற வேண்டுமானால் முதலில் யுத்தம் நிறுத்தப்படல் வேண்டும்.

எனவே யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானத் தீர்வு ஏற்பட்டு நீங்கள் நிம்மதியுடன் செல்ல வேண்டும். தாம் விரும்பிய இடத்தில் குடியேற உங்களுக்கு உரிமையுண்டு! என்றார்.

**எம்.எம். நாஸர் (புலொட்)**

இடம் பெயர்ந்து வதியும் உங்களுக்கு உதவுவதில் நாம் என்றென்றும் முன் நிற்போம் . உங்கள் போராட்டங்களுக்கு எமது ஆதரவு என்றும் உண்டு.

மீண்டும் கூறுகிறேன், உங்களது பிரச்சினைகளுக்கு எமது ஆதரவு என்றும் உண்டு! என்றார்.

**எஸ்.கே. சுபசிங்கா (பாராளுமன்ற உறுப்பினர் மக்கள் விடுதலை முன்னனி)**

வடக்கு முஸ்லீம்கள் மீண்டும் தமது பகுதிக்கு சென்று வாழ விரும்பினால் அதற்கு நாம் பூரண ஆதரவு வழங்குவோம்.

மூதூர், சம்பூர் பகுதிகளிலிருந்து முஸ்லீம்கள் விரட்டப்பட்டனர். சேருநுவர பகுதியிலும் புலிகள் தாங்குதல் நடாத்தியுள்ளனர். வடக்கு கிழக்கு மாகாணம் தமிழர்களின் தாயக பூமி என கூறும் விடுதலைப் புலிகள் அப்பகுதியில் முஸ்லீம் மக்களை ஏன் குடியிருக்க அனுமதிக்கிறார்கள் இல்லை?

விடுதலைப் புலிகளின் இறுதித் தீர்வு தனி ஈழம் என்றே கூறுகிறார்கள். வடக்கும் கிழக்கும் இணைந்துள்ளது. சட்டத்தின் மூலம் பிரித்துள்ளோம். யதார்த்த ரீதியாக பிரச்சினைகளை தீர்க்கும் ஒரே ஒரு கட்சி மக்கள் விடுதலை முன்னனி தான்! என்றார்.

**எஸ்.எச்.எம். நியாஸ் ( வடமேல் மாகாண சபை உறுப்பினர் ஸ்ரீ.ல. முஸ்லீம் காங்கிரஸ்)**

அநியாயத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் ஒரே யொரு அரசியல் கட்சியான நாம் உங்களது பிரச்சினைகளைத் தீர்வு கண்டு மீண்டும் உங்களது தாயக பூமிக்கு நீங்கள் திரும்புவதை ஆதரிக்கின்றோம். இன்றைய மாநாட்டுக்கு பிரதான எதிர்கட்சியான ஐ.தே.கட்சி வரவில்லை. அவர்களது காலத்திலேயே நீங்கள் விரட்டப்பட்டீர்கள். இந்த மகா நாட்டில் வந்து பேசிய ஏனைய கட்சிகளுக்கு உங்களின் மீது எதுவிதமான அக்கறையுமில்லை. தங்களது கட்சியின் செயற் பாடுகளை வடபகுதியில் நிலை நாட்டவே அவர்கள் முனைந்து நிற்கின்றனர்.

இங்கு வந்த கட்சிகளின் பிரதிநிதிகள் இடம் பெயர்ந்தவர்களின் பிரச்சினைனை ஒரு சில்லறைப் பிரச்சினையாகவே நோக்குகின்றனர்.

இணைந்த வட கிழக்கில் தென் கிழக்கு அவருதான் முஸ்லீம்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு என மறைந்த தலைவர் அஷ்ர.ஃப் கூறினார். தங்களை தாங்களே ஆழ வேண்டும்.

பிரபாகரன் அழைத்தால் நாம் அங்கே செல்ல நாம் என்ன செப்புக் காசா? தீர்க்கமான தீர்வு ஏற்பட வேண்டும். என்றும் உங்களின் நலன்களில் நாம் பூரண ஆதரவுடன் இருப்போம்! என்றார்.

# இனியவை இருபது

**குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்கவும், இதோ சில எளிய வழிகள்.**

01. நானே பெரியவன், நானே சிறந்தவன் என்னும் அகந்தையை **(Ego)** விடுங்கள்.

02. அர்த்தமில்லாமலும், தேவையில்லாமலும், பின் விளைவு அறியாமலும், பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள். **(Loose Talks)**

03. எந்த விஷயத்தையும், பிரச்சினையையும நாசூக்காகக் கையாலுங்கள். **(Diplomacy)**

04. விட்டுக் கொடுங்கள். **(Compromise)**

05. சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள். **(Tolerance)**

06. நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி, என்று வாதாடாதீர்கள். **(Adement Arguement)**

07. குருகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.

08. உண்மை எது, பொய் எது, என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள். **(Carrying Talks)**

09. மற்றவர்களைவிட உங்களையே எப்போதும் உயர்வாக நினைத்து கர்வப்படாதீர்கள். **(Superiority Complex)**

10. அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப் படாதீர்கள். **(Over Expectation)**

11. எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்கயையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

12. கேல்விப் படுகின்ற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.

13. அற்ப விஷயங்களை பெரிதுபடுத்தாதீர்கள்.

14. உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். **(Flexibiliyt)**

15. மற்றவர் கருத்துக்களை, செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள். **(Mis Understanding)**

16. மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும், இனிய, இதமான சொற்களை பயன்படுத்தவும் தவறாதீர்கள். **(Courtestesy)**

17. புன் முறுவலைக் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

18. பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதை தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.

19. அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.

20. பிரச்சினைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்

-IIC வெளியீடு

## அன்பார்ந்த வாசகர்களே!

எமது அடுத்து வெளிவரும்
நேசக்கரத்தில்
வாசகர் மன்றம்
சிறுகதை
கவிச்சோலை
மக்கள் பிரச்சினை
செய்திக் கதம்பம்
ஆகிய பகுதிகள் இடம்பெற
உள்ளது எனவே வாசகர்களாகிய

*நீங்களும் இப்பகுதிக்கு எழுதலாமே!*

**எழுதி அனுப்ப வேண்டிய முகவரி**

**நேசக்கரங்கள்**

இல: 07, 30 வீட்டுத்திட்ட வீதி,
தில்லையடி, புத்தளம்.

# இந்த சமத்துவம் கண்டு சரித்திரம் திகைத்தது

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ஆருயிர்த் தோழர்களில் ஒருவர் அபூதர் கிபாரி (ரலி) !

ஒரு முறை இவருக்கும் பிலால் அவர்களுக்கும் இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டது.

பிலால் ரலி எத்தியோப்பியாவைச் சேர்ந்தவர். நீக்ரோ இனத்தவர். கறுப்பு நிறத்தவர், அடிமையாக இருந்து விடுதலையானவர்.

வாக்குவாதத்தின் போது அபபூதர் கிபாரி, ஆத்திரம் மேலிட பிலால் அவர்களைப் பார்த்து, "கருப்புப் பெண்ணுக்குப் பிறந்த பயலே" என்று சொல்லி விட்டார்.

உடனே பிலால் அவர்கள் இறைத் தூதரிடம் சென்று முறையிட்டார்.

நபி (ஸல்) அவர்கள் அபூதர்ரை அழைத்து கண்டிப்பான குரலில் கூறினார்கள்.

"அபூதர்! பிலாலை அவரின் தாயாரின் நிறத்தைச் சொல்லி கேலியாக அழைத்தீரா? பழைய மூடத்தனங்கள் இன்னும் உங்களிடமிருந்து விலகவில்லையா? அதன் பாதிப்புகள் இன்னும் உங்களிடம் இருக்கின்றனவா? பிலால் உங்கள் சகோதரர்!"

அபூதர் தம் தவரை உணர்ந்தார். மனம் வருந்தினார். பிலாலிடம் வந்து "பிலால் அவர்களே! உங்கள் கால்களை என் முகத்தில் வைத்து மிதியுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

★ ★ ★

நபிகளாரின் காலத்தில் மக்ஸூம் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண் திருட்டுக் குற்றம் புரிந்து விட்டாள். குற்றம் நிரூபிக்கப்பட்டு அவள் தண்டனை பெருவதும் உறுதியாகிவிட்டது. குறைஷி குலத்தினர் இதை ஒரு கௌரவப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டனர்.

உயர் குடும்பத்தைச் சேர்ந்த பெண் தண்டிக்கப்படக் கூடாது. அவ்வாறு தண்டிக்கப்படுவது தங்களை அவமானப் படுத்துவது போலாகும் என்று கருதினர்.

குறைஷிகள் தங்களுக்குள் ஆலோசித்தனர்.

இந்தப் பெண்ணுக்குத் தண்டனை வழங்காமல் இருக்கும்படி நம் சார்பாக யாரேனும் அண்ணலாரிடம் தூது அனுப்பலாம் என்று தீர்மானித்தனர்.

உஸாமா பின் ஜைத் (ரலி) அண்ணலாரிடம் பேரன்பைப் பெற்ற அருமைத் தோழர் ஆவார்.

எனவே குறைசிகள் உஸாமாவைப் பெரிதும் வற்புருத்தி, தங்கள் சார்பாக அண்ணலாரிடம் பேசச் சொன்னார்கள்.

அவர்களின் வேண்டுகோளை ஏற்று உஸாமாவும் அண்ணலாரிடம் பேசினார்கள்.

உஸாமாவின் பரிந்துரையைக் கேட்ட உடனேயே இறைத்தூதரின் முகம் மாறி விட்டது. உணர்ச்சி பொங்கப் பேசினார்.

"உயர் தகுதியில் இருப்பவர்கள் தவறு செய்தால் அவர்களை வெறுமனே விட்டு விடுவது, சாதாரண மக்கள் தவறு செய்தால் அவர்களைத் தண்டிப்பது, இந்தப் போக்கின் காரணமாகத்தான் உங்களுக்கு முன் வாழ்ந்த சமூதாயங்கள் நாசம் அடைந்தன. நானும் அவ்வாறே செய்ய வேண்டுமா?"

இவ்வாறு கேட்ட நபியவர்கள் உறுதிப் படக் கூறினார்கள்.

"முஹம்மதின் மகள் பாத்திமாவே திருடியிருந்தாலும் கூட நான் அவளின் கையைத் துண்டிப்பேன் நிச்சயம்!"

★ ★ ★

திரு நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு முதல் கலீஃபாவாக ஆட்சிப் பொறுப்பேற்ற அபூபக்கர் (ரலி) அவர்கள் மக்களை நோக்கிக் கூறினார்கள்.

மக்களே! உங்களுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உங்கள் எல்லோரையும் விட நான் உயர்ந்தவன் என்பதால் அல்ல!

"நான் நல்லது செய்யும் போது எனக்கு ஒத்துழைப்புத் தாருங்கள், தவறு நிகழ்ந்து விட்டால் திருத்துங்கள்....

"உங்களில் பலவீனமானவர் என்னிடத்தில் பலசாலி ஆவார். அதாவது, அவருடைய மறுக்கப்பட்ட உரிமைகளை நான் வலிமையைப் பயன் படுத்தி பெற்றுத் தருவேன்.

"உங்களில் பலசாலி என்னிடத்தில் பலவீனமானரே! அவரிடமுள்ள மற்றவர்களின் உரிமைகளை நான் பரித்தெடுத்து உரியவருக்கு அளிப்பேன்......

"சத்திய வழியிலான போராட்டத்தைக் கைவிடாதீர்கள்... அதர்மத்திற்கு அடிபணிபவர்களை அல்லாஹ் நிலை குலையச் செய்திடுவான்.....

"இறைவனுக்கும், இறைத்தூதருக்கும் நான் கீழ்படியவில்லை என்றால் அப்பொழுது எனக்கு

★ ★ ★

ஹிஜ்ரத்தின் (மக்காவைத் துறந்து மதீனாவுக்கு வந்த) ஆரம்ப கட்டத்தில் நபி (ஸல்) அவர்கள் முஹாஜிர்களுக்கும் (மக்கவைத் துறந்து வந்தவர்களுக்கும்) அன்சாரிகளுக்கும் (மதீனாவாசிகளுக்கும்) இடையே சகோதரத்துவ உறவை ஏற்படுத்தினார்கள்.

உயர் குடும்பத்தில் பிறந்த நபிகளாரின் பெரிய தந்தையார் ஹம்ஸாவும் அடிமை ஜைதும் "சகோதரர்கள்" ஆயினர்.

அதே போல் அபூபக்கர் (ரலி) அவர்களும் ஜைத்தின் மகன் காரிஜாவும் "சகோதரர்கள்" ஆயினர்.

இது இரத்த பந்தமுள்ள சகோதரத்துவத்துக்கு நிகராக இருந்தது.

சொத்துரிமையிலிருந்து வாழ்வின் இதர விவகாரங்கள் வரை இந்த சகோதரத்துவம் நீடித்தது.

பிறகு முவத்தா போரின் போது இதோ அடிமை ஜைத் அவர்களைத்தான் படைத் தளபதியாக அண்ணலார் நியமித்தார்கள்.

அந்தப் படையில் பெரும் பிரமுகர்களும் உயர் குலத்தைச் சேர்ந்த தலைவர்களும் இருந்தனர்.

ஆயினும் அவர்கள் யாருக்கும் தளபதி பொறுப்புத் தரப்படாமல் அடிமை ஜைத்துக்கும், அவருக்குப் பிறகு அவருடைய மகன் உஸாமாவுக்குமே அந்தப் பதவியை அண்ணலார் அளித்தார்கள்.

திருநபியின் மறைவுக்குப் பிறகு அபூபக்கர் அவர்கள், அதே படையைப் போருக்கு அனுப்பும் போது உஸாமாவை படைத் தளபதியாய் நியமித்தார்கள்.

இராணுவத்தை வழியனுப்ப மதீனா எல்லை வரை கலீ..பா அபூபக்கரும் வந்தார்கள்.

அவர் நடந்து வந்தார்.

தளபதி உஸாமா குதிரையில் ஏறி அமர்ந்த வண்ணம் வந்தார்.

வயது முதிர்ந்த கலீ..பா நடந்து வர, இளைஞரான தாம் வாகனத்தில் ஏறி அமர்ந்து வருவது, உஸாமாவுக்கு சங்கடத்தை அளித்தது.

அவர் கலீ..பாவை நோக்கி, ஒன்று நீங்களும் வாகனத்தில் ஏறி அமர்ந்து வாருங்கள் அல்லது நான் கீழே இறங்கி உங்களுடன் நடந்து வருகிறேன்" என்றார்.

உடனே கலீ..பா, "இறைவன் மீது ஆணையாக! நீங்கள் வாகனத்தில் இருந்து இறங்கக் கூடாது. நானும் ஏறி அமர மாட்டேன். இறைவழியில் நடப்பதால் என் கால்களிலும் கொஞ்சம் தூசு படியட்டுமே!" என்றார்.

ஆட்சிப் பொறுப்பில் தமக்கு உதவி செய்ய உமர் (ரலி) அவர்களும் கூட இருப்பதால் நன்றாக இருக்கும் என்று அபூபக்கர் நினைத்தார்.

ஆனால் உமரோ அந்தப் படையில் ஒரு வீரராக இருந்தார்.

தளபதி உஸாமாவின் அனுமதி இல்லாமல் உமரைத் தம்முடன் வைத்துக் கொள்வது அசத்தியம்!

தன்னால் நியமிக்கப்பட்ட தளபதியிடம் கலீ..பா தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார்: உஸாமா அவர்களே! தங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் உமர் என்னுடன் இங்கே இருக்கட்டும்!"

இங்கு நாம் கவனிக்க வேண்டியது, "தங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால்" என்ற கலீ..பாவின் வார்த்தைகளைத்தான்!

★ ★ ★

ரோமாபுரி இராணுவத்தின் பிரதிநிதியான ஜேர்ஜ் முஸ்லிம் இராணுவத் தளபதியுடன் பேச வந்தார். அப்போது அபூ உபைதா தரையில் அமர்ந்திருந்தார். அவரும் சாதாரண படை வீரர் போலத்தான் இருந்தார்.

"உங்கள் தளபதி எங்கே?" என்று ஜார்ஜ் விசாரித்தார்.

வீரர்கள் அபூ உபைதாவைக் காட்டினார்கள். ஜார்ஜுக்கு நம்பிக்கை வர வில்லை.

படைத் தலைவருக்குரிய பதவிச் சின்னங்களோ, சிறப்பாக அமைக்கப்பட்ட தனி இருப்பிடமோ இல்லையாதலால் அவர் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டார்.

"தரையில் அமர்திருக்கும் அவர்தான் எங்கள் தளபதி!" என்று பதில் வந்தது.

ஜார்ஜ் வியப்பின் உச்சிக்கே சென்று விட்டார்.

"இவரா உங்கள் தளபதி! எங்களுடைய அடிமையைத் தவிர, வேரு யாரும் இவ்வளவு மோசமான நிலையில் இருக்க மாட்டார்கள்!"

இது கேட்ட அபூ உபைதா கூறினார்.

"நாங்கள் எல்லோரும் சமமானவர்கள். இங்கு ஆண்டான், அடிமை வித்தியாசம் இல்லை.

எல்லோரும் இறைவனின் அடிமைகளே! அது மட்டுமல்ல, உரிமைகளிலும் சம வாய்ப்பு உடையவர்களே!

ஜார்ஜ் திகைத்து நின்றார்.

அவர் மட்டுமல்ல, இந்தச் சமத்துவம் கண்டு சரித்திரமே திகைத்தது!

**ஜாவீத்.**

# கவிச்சோலை...

## எமக்கும் பதிலிருப்பாயா?

(1900ம் ஆண்டு வடக்கிலிருந்து புலிகளால் துரத்தி
அடிக்கப்பட்ட முஸ்லிம் சகோதரன் ஒருவனின்
ஆத்மாவின் பிரபாலமே இக் கவிதை!)

இருதயத்திலிருந்து கடைசி வார்த்தையையும்
துப்பாக்கி முனையின் ஊடே
கொடூரமாய்ப் பரித்துக் கொடுத்தாய்!

அனற் தகிக்கும் பகற் பொழுதொன்றில்
நாங்கள் அனைத்தையும் இழந்தோம்
கண்களை இழந்தோம்
காதுகளை இழந்தோம்
எங்கள் நெஞ்சக் கூட்டை இழந்தோம்
நேசமிக்க வாழ்வை இழந்தோம்
இறுதியில் சொல்வதற்கான
வார்த்தையையும் இழந்தோம்!

நெருப்பெரியும் நிலத்தில்
துரத்தியடிக்கப்பட்ட குருடர்களாய்
எங்கள் ஜீவதம் அல்லலுருகிறது

உப்புக் கரிக்கும் பூமிகளில்
கண்ணீரும் செந்நீரும் கலந்து
காலம் கழிகிறது

ஓட்டையாகிப் போன
ஓலைக் குடிசைகளின் உள்ளே
சோற்றுப் பருக்கைகளுக்காய்
சோர்ந்தழும் எமது குழந்தைகளும்
வயிறும் மனமும் நிதமும் எரியும்
வாழ்வை வெறுத்த குமரிகளும்
அகதி முகாம்களிலே அடைபட்டுக் கிடக்கின்றனர்

வாழ்வின் மீதான நேசம்
இனியும்
புலர்தெழுமா என்பது சந்தேகமே!
அனைத்தையும் இழந்து நிற்கும் போது
தேவதைகள் கனவில் வருவார்களா?

யார் எங்களை கரை சேர்ப்பர்?
யார் எங்களை வாரி அனைப்பர்?

நீண்ட காலமாய்
இப் பூமிப் படுக்கை மீது
நலிந்த குரல் கொண்ட எமது கேள்விகளுக்கு
பதில் இல்லை! பதில் இல்லை!!

எம். பௌசர்

## சமாதானம்

அகிலமெங்கும் அமைதிப்
பூக்கள் பூக்கனும்!
அன்பு கருணை கொண்டு
அதனைக் காக்கனும்!
சாதிபேதம் என்ற சொல்லை
நீக்கனும்!
சமத்துவத்தை என்றும்
வாழ்வில் தேக்கனும்!

சிங்களவர் தமிழர் முஸ்லிம்
பறங்கியும்
'ஸ்ரீலங்கா' ஈன்றெடுத்த
பிள்ளைகள்!
அனைவரும் நாம் மனசுவிட்டுப்
பேசினால்
அழிந்து போகும் நாளும் கண்ட
தொல்லைகள்!

இனத்துவேசம் விட்டு நாங்கள்
சேருவோம் மனித
இனங்களெல்லாம் ஒன்றே என்று
கூறுவோம்!
சமாதான பறவை தேடிச்
செல்லுவோம்
சமாதானம் செய்து செய்து
ஈழப்போரை வெல்லுவோம்!!

அஸ்மின் உதுமாலெவ்வைகல்கிசை

## ஒற்றுமையே உயர்வு

மொழியும், மதமும், இனமும்
பேசிப் பிரிந்திடலாமோ
தொழில் உயர்வு தாழ்வு
காட்டி வாழ்ந்திடலாமோ
காடு வெட்டும் ஒருவனுக்கு
கத்தி தருவான் ஒருவன் - அவர்கள்
காய்ச்ச உண்ணப் பாணைசட்டி
செய்திடுவான் ஒருவன்
கப்பலிலே பலரை ஏற்றிக்
கடலில் ஓட்டுவான் அவன்
பாதுகாப்புடனே கரையில்
சேர்த்திடுவான் அவன்
ஒருவர் வாழ்வில் பலரின் சேவை
இணைந்திருப்பதால்......
ஒற்றுமைதானே வாழ்வில்
உயர்வினை அளிக்கும்

பாத்திமா ஹஸ்னா

# மறக்கப்பட்ட வடக்கு

புழுக்கம் நிறைந்த
வாழ்க்கை.....
அழுக்கு நிறைந்த
உலகம்.....

இவைகளின் நடுவில்
இனந்தெரியா
இடுக்குகளில்
நாங்கள்.....

வாழமுடியா
வாழ்க்கையை
வாழத்துடிக்கும் எங்கள்
தலைமுறைகள்.....

ஆயுதங்களின்
ஆணவத்தால்
பறிக்கப்பட்ட எங்கள்
உரிமைகள்.....

வடக்கோடு
வழக்குத் தொடுத்து
பாதினாறு வருடங்கள்
தோழா......

வாழ்கையை
வாழ்க்கையாய் வாழ்ந்த
அந்த நாட்கள்......

பனங்காய் வாசம் வீசும்
மொழியின் லிபிகள்.....

ஒடியல் எஞ்சிக் கிடக்கும்
பல்லிடுக்குகள்......

சில்லிடும் சிரிப்புகளால்
நிறைந்த எங்கள் வீட்டுத்
திண்ணை......

நிலவைக் காதலித்து
கவி வரி எழுதிய
மொட்டை மாடி
நினைவுகள்.......

சாரல் மழைத்
தூரலில் குளித்து
விளையாடிய நிலா
முற்றங்கள்.....

தென்றலை
வம்புக்கிழுக்கும்
தென்னங்கீற்றுகள்......

முதன் முதலாய்
கால் நனைத்த அந்த
கடல் அலைகள்......

கூட்டாஞ் சோறு
ஆக்கிப் பழகிய
ஆற்றுப் படுக்கைகள்.....

நெல் மணக்கும்
வயல் வெளிகள்....

குருஞ்சி மணக்கும்
ஒற்றையடிப்
பாதைகள்......

ஓஹோ......!
இது போன்று

எத்தனை மொட்டை
மாடிகள்.....!
எத்தனை நிலா
முற்றங்கள்......!
எத்தனை ஒற்றையடிப்
பாதைகள்....!
எத்தனை
திண்ணைகள்......!

ஐய்யோ.......
ஐய்யய்யோ......!

அத்தனையுமின்று
சஹாராவானது
என் சகா........!

அத்தனையுமின்று
இரத்த வாடை வீசுகிறது
பார்.......!

பள்ளிக் கூடங்கள்
இன்று பாம்புப் புற்றுகள்.....

யுவதிகள் எல்லாம்
மரணத்தின் பிடியில்......

குண்டுகளாலும்
குண்டர்களாலும்
எங்கள் எதிர் காலம்
எரிக்கப்பட்டது.

விழுந்த செல்களால்
எங்கள் உயிரணுக்கள்
சிலுவையில் மாட்டிக்
கொண்டது.

உடைமைகளும், உடைகளும்
உத்தரவாதமின்றி
பறிக்கப்பட்டது.

இரவோடு இரவாக
இனந்தெரியா இருள்களில்
பயணம்.

தீப்பொறி பறக்கும்
அவசரத்தில்,
பலரது உயிர்த்துளி
நின்று போனது

பிரிந்த பலர் சேர்ந்ததும்
சேர்ந்த பலர் பிரிந்ததும்
இடையிடையே அரங்கேற்றம்.

அத்தனையும் இழந்து
விட்டோம்....
இனியும் இழக்க உயிரைத்
தவிர ஒன்றுமில்லை
எம்மிடம்

வரும் வழியில்
சில கற்பங்கள் கூட
மருத்துவச் செலவின்றி
கலைந்து போனது.....

எல்லாமே எரிந்த
போதும் எங்கள்
நம்பிக்கை எரியவில்லை....

எல்லாமே தீர்ந்த போதும்
எங்களுக்காய் கிழக்கு
விடிந்து கொண்டது.....

என்ன செய்வது
நாளைக்காய் இன்று
சமாதானத்தை
சேமிக்கிறோம்.....

இருந்த போதும்
கடைசியிலே எஞ்சியது
அகதி என்ற பட்டம்!

நிறைவேறுமா இந்த
சமாதானப் பேச்சுத்
திட்டம்.....!

மருதத் தென்றல் நிப்றாஸ்

நபியே! எதைப்பற்றி உமக்கு தீர்க்கமான அறிவு இல்லையோ அதனைத் தொடராதீர். ஏனெனில் நிச்சயமாக செவி, பார்வை, இதயம், ஆகிய ஒவ்வொன்றும் இதனைப் பற்றி மறுமையில் விசாரிக்கப்படக்கூடியதாக இருக்கிறது.

(பனூஇஸ்ராயீல் - 36)

## சண்டைகள் வேண்டாம்

சண்டைகள் வேண்டாம் வாருங்கள்
சமாதானம் வெசய்வோம்

சிங்களம் என்ற சின்னமும் வேண்டாம்
முஸ்லிம் என்ற முத்திரையும் வேண்டாம்
தமிழர் என்ற தடையமும் வேண்டாம்
வாருங்கள் நாமெல்லோரும்
இலங்கயர் என்ற இலட்சினையைத் தரிப்போம்.

அதனால் இனியும் ஒரு
யுத்தத்தைத் தவிர்ப்போம்

போர்: எமை வேருடன் சாய்க்கும் வெள்ளம்
போர்: எமை சுட்டுப் பொசுக்கும் தீ
போர்: எமை பின்னோக்கித் தள்ளும் புயல்
போர்: எமை ஆபத்திற்கு
இன்னும் ஆலத்திற்கு
இழுத்துச் செல்லும் சுழி

மரணம், அங்கவீனம்,
அநாதை, அகதி,
வறுமை, வரட்சி,
எல்லாமே போர் பதித்த முத்திரைகள்
தடுக்க முடியா தரவுகள்
எண்ணிலடங்கா இழிவுகள்
எக்காலமும் தொடரும் வடுக்கள்

போரினால் நாம் இழந்தது பலகோடி
போரினால் ஏனைய நாடுகள்
அடைந்தது பலகோடி
ஒற்றுமையால் உயர்ந்த நாடுகள்
எம் வேற்றுமையின்
போரை வேடிக்கைப் பார்த்தன

அமைதியின் திசையை நோக்கி
நாம் அடியெடுப்போம்

சமாதான சமிக்ஞைகளை
இச் சந்நிதானத்திற்கே அனுப்புவோம்
அதனால்
சண்டைகள் வேண்டாம் வாருங்கள்
சமாதானம் செய்வோம்.

கபிலன் லூனுகலை.

## சமாதானம்

சமாதானம் சகவாழ்வை ஏற்படுத்தும் கருவிகளாக சமயங்கள் உள்ளன. மனிதர்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து சமூகங்களை இணைக்கும் பலம் சமயங்களுக்கு மட்டுமே உண்டு. எனவே மனிதர்கள் சமயங்கள் கூறும் வழியில் சென்றால் இந் நாட்டில் சாந்தி சமாதானம் மலரும்.

திருமலை மட்டக்களப்பு மாவட்ட ஆயர் பேரருள்
திரு கலாநிதி - கிங்ஸ்லி சுவாமிப் பிள்ளை.

# நினைவில் மறையும் தாயகம்

*ஏ.எம்.எம். இக்பால்*

எம் பிஞ்சுப் பாதம் முதல் பதித்த மண்....
நம் தாயகமாம் மன்னார்....
அத்தாயகத்தின் மண்.....
எங்களின் சொந்த மண்.....
எங்களை ஈன்ற மண்....
அருந்தாயாரின் நெஞ்சில் நாம் சாய்ந்த மண்....
பந்தடித்தோடி நாம் ஓய்ந்த மண்.....
தமிழ் பாடியும், பேசியும் சுவைத்த மண்.....
வான்புகழ் நபிகளின் பாதையிற்
பள்ளி வாசலிற் தொழுகையிற் சேர்ந்த மண்.....
நோன்பினில் நல்லறஞ் செய்த மண்.....
நாம் நாள் தோறும் தொழுத மண்.....
காதலின் நினைவினில் மிதந்த மண்.....
பல கனவிடை ஆழ்ந்து, மகிழ்ந்த மண்.....
வேதனை வெந்துயருணர்ந்த மண்.....
மனம் தேறவும், ஆறவுஞ் செய்த மண்.....
அடிமையில் வாழ்திட மறுத்த மண்.....
தன் உரிமையை காத்திட துணிந்த மண்.....
விடுதலைப் போரினில் எழுந்த மண்.....
நம் உளக்கிடங்கில் பதிந்த எண்ணக்கரு மண்.....
நம் தாயக மண்.....

அன்று 1990ம் ஆண்டு ஒக்டோபர் பதின்மூன்று
நம் உணர்வை உசுப்பிய நாள்....
தாயகம் நம் கரங்களிலிருந்து
தடம் பரண்டோடிய நாள்....
நாமெல்லாம் ஓரினம் என்ற சொல்தனை மாற்றி
எங்களை துரத்திய நாள்....
நம் உடமைகள் உடைக்கப்பட்டு
நம் வாழ்வு இழந்த நாள்....
நம் வீடு நற் தொழில் இழந்து
வெறுங்கையராய், அகதிகளாய்
மாற்றப்பட்ட நாள்....
நம் நிலைகள் அகதி முகாம்களில்
வாட்டம் பெறச் செய்த நாள்.....
அது நம் இதயத்தைச்
சல்லடையாக துளைத்த கொடு நாள்...
நம் இல்லங்கள் இலக்கு வைக்கப்பட்டு
குருதியால் நனைந்த நாள்.....
எம் சுதந்திர இறக்கைகள்
நம்மிலிருந்து அறுக்கப்பட்ட நாள்.....
பிணங்கள் வீதிகளில் விழுந்து
குருதியில் மிதந்த கொடூர நாள்.....
என் அடி மனதில் ஆழமாய்
விட்டுப்பிரியாத அந்நாள்.....
நம் வாழ்வின் கருப்பு ஒக்டோபர்
இன்று நம் வாழ்வு!
வெந்த புண்ணில் வேல் பாய்ந்தாற் போல....
துன்பங்கள் தொடர்கின்றன.
இன்று நம் தனிமை!
தாயை இழந்த மான் குட்டியைப் போல.....
தவிப்பாக இருக்கிறது.
இன்று நம் உரிமைகள்!
தீயில் அகப்பட்ட பஞ்சைப் போல.....
பொசுக்கப்படுகின்றன.
எமது கோரிக்கைகள்
ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாதாய்ப் போல....
ஏட்டளவில் ஏந்தப்பட்டு விட்டன.
ஏன் இந்த தண்டனை நமக்கு?
நாம் செய்த தவறு என்ன?
நாம் சுவாசிக்கும் காற்று......
இன்னொருவன் உடைமை என......
நாம் நடக்கும் பாதை......
நமது சொந்த பூமி அல்ல என......
நாம் கழிக்கும் இரவு......
இரவலாக எடுத்த இரவு என......
நம்முள்ளம் நம்மை வாட்டி வதைக்கின்றது.
எங்களின் நெஞ்சக் கனவுகள்
பறித்தெடுக்கப்பட்டு!!!
நினைவுப் புதையல்கள்
புதைக்கப்பட்டு!!!
நம் வாழ்வ நமக்கு சாபமாக
சான்று பகர்கின்றது.
இது நம் அவலக் கோடுகள்.

நமது தாயக அரவணைப்பிழந்த
அவலத்தின் வருடங்கள் பதினாறு!
நம் சிரமங்கள் வருத்தங்கள் திருத்துவோம்
என்றபடி வாக்களித்து வருடம் ஏழாச்சு!
எனினும்,நம் உள்ளங்களில் வருத்தங்கள்,
துன்பங்கள் வடிக்கப்பட்டு விட்டன.

என் தாயகமே!
உன் மீள்வு கிடைக்கும், கிடைக்கும் என்று
வாய்த்திறந்து கொட்டாவி விடுகின்றோம் நாம்!
எட்டாத பழத்திற்கு கொட்டாவி விடுவது ஏன்
என்று நம் உள்ளங்கள் வினவுகின்றன.
இவ் வினாவிலே ஒரு தசாப்தம் கரைந்து
விட்டது. தாயக மண் தவழ நம் கால்கள்
துடிக்கின்றன! இளைய சந்ததியின் இளம்
கால்கள் நம் மண்ணில் சுவடு பதிக்கும்
நாள் காண ஏங்குகிறோம்! தவிக்கிறோம்.
சமாதானப் பறவை சிறகடித்துப் படபடத்து
சுதந்திரமாக பறந்து திரியும் காலம் வரும் வரை
தாயகமே! நீயோ நம் நினைவுக் கூண்டிலிருந்து
சிறகடித்து படபடத்து ஒரு தசாப்த தூரம் பறந்து
மறைந்து கொண்டேயிருக்கிறாய்!

# புத்தளம் தில்லையடியில் உப தபால் நிலையம்

தபால் தந்தி தொலைத் தொடர்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி பி.ஏ.எஸ் சுப்யான் அமைச்சின் அலுவலகத்தில் சந்தித்தும் பேசினார். அச்சமயம் புத்தளம் பிரதேசத்திலுள்ள உள்ளூர் இடம் பெயர்க்கப்பட்ட மக்கள் வாழும் தில்லையடி பிரதேசத்தில் உப் தபால் அலுவலகம் ஒன்றைத் திறந்து தரும் படி கோரிக்கையை எழுத்து மூலம் முன் வைத்தார்.

வடமாகாண முஸ்லிம்களில் வாக்குரிமை பெற்றவர்களின் வாக்குகளைப் பதிவதில் எதிர் நோக்கும் பிரச்சினைகளைப் பற்றியும் மௌலவி பி.ஏ.எஸ் சுப்யான் எடுத்துக் கூறினார்.

மேலும் யாழ் கிளிநொச்சி மாவட்ட மக்கள் படும் துன்பங்களைப் பற்றி அவருக்கு எடுத்துரைத்ததுடன் இம் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த தேவையான நடவடிக்கைகளையும் எடுக்குமாறு வேண்டிக் கொண்டார்.

இதுற்கு பதிலளித்த அமைச்சர் ஹக்கீம் தில்லையடி உபதபால் நிலையத்திற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் யாழ் கிளிநொச்சி மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தன்னால் முடிந்த உதவிகளைச் செய்வதாக உறுதியளித்தார்.

வாக்காளர் இடாப்பில் வாக்குப் பதிவதில் எதிர் நோக்கும் பிரச்சினை தொடர்பாக உடனடியாகவே தேர்தல் ஆணையாளருடன் தொலைபேசியில் தொடர்பு

**பணிமனைச் செய்திகள்**

## யாழ் முஸ்லிம்களின் மீளக்குடியேறும் உரிமையை உறுதிப் படுத்துங்கள்

### சமாதானப் பேரவை அழைப்பு

"வடக்கிலிருந்து வலோத்காரமான முறையில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு இந்தப் புத்தாண்டோடு 17 வருடங்களாகின்றன. ஆனாலும் இவ்வாறு இடம் பெயர்ந்த அந்த முஸ்லிம்களின் பலர் இன்னமும் தமது சொந்த வீடுகளுக்குச் செல்ல முடியாதவர்களாகவே இருக்கின்றனர். இவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் சென்று குடியேறுவதற்கான சகல வழிவகைகளையும், அரசும் புலிகளும் செய்ய முன் வர வேண்டும்" என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவை அறிக்கையொன்றின் மூலம் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

அந்த அறிக்கையில் மேலும் சொல்லப்பட்டிருப்ப தாவது:-

2002 இல் செய்யப்பட்ட யுத்த நிறுத்த உடன் படிக்கையின் பயனாக கணிசமானளவு முஸ்லிம்கள் வடக்கே சென்று மீளக் குடியேறினார்கள். ஆனாலும், முற்று முழுதாக இடம் பெயர்ந்த அனைவரும் சென்று குடியேற முடியவில்லை.

இந்த முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்ற ஒரு குறை உண்டு. இதுவே எதிர் வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது, முஸ்லிம்கள் சார்பில் தனியானதொரு தூதுக்குழு இடம் பெற வேண்டும் என்ற கோரிக்கைக்கு வலுவூட்டுவதாயிருக்கிறது. எனவே, எதிர் காலத்தில் நடைபெற இருக்கும் பேச்சுக்களின் போது, இவர்களின் மீள்குடியேற்றத்துக்கான உரிமைகள் குறித்து பேச அரசும் புலிகளும் முன் வர வேண்டும் என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவை இரு தரப்பினரையும் கேட்டுக் கொள்கிறது. என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பணிமனைச் செய்திகள்**

## வடபகுதி முஸ்லிம்களின் பிரச்சினைகள் ஜேர்மன் தூதுவரிடம் விபரிப்பு

ஏப்ரல் 17ம் திகதி ஜேர்மனியின் இலங்கைக்கான தூதுவர் ஜோர்ஜன் வீரத்தை மக்கள் பணிமனைத் தலைவரும் காதிநீதிபதியுமான மௌலவி பி.ஏ.எஸ். சுப்யான் ஜேர்மன் தூதுவராலயத்தில் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது தொடரும் இன வன்செயல்கள், யுத்தத்தினால் தமது தாயக மண்ணுக்கு உரிமையுடன் குடியேற முடியாமல் இருக்கும் வடபகுதி மக்களின் அவலம் அவர்களின் எதிர் காலம் பற்றி பேசப்பட்டது.

இப்பேச்சுவார்த்தையின்போது இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதற்காக இரு சாரார் மீதும் அழுத்தம் கொடுக்கப்படல் வேண்டும். அரசியல் தீர்வில் சகல இன மக்களுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை காண வேண்டும். சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் நடைபெறும் யுத்தத்தில் இடையில் சிக்கித் தவிக்கும் முஸ்லிம் மக்களின் நல் வாழ்விற்கு உதவ வேண்டும். உரிமை மீறல்கள் நிறுத்தப்படல் வேண்டும் என்பன போன்ற விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.

இதற்கான பங்களிப்பை ஜேர்மன் அரசு எமது மக்களுக்குச் செய்ய வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக ஆவணங்களளும் தூதுவரிடம் கையளிக்கப்பட்டதுடன் புத்தளத்திற்கு விஜயம் செய்து அங்கு மக்கள் படும் துயரங்களை நேரில் காணுமாறு மௌலவி சுப்யான் அழைப்பு விடுத்தார். **பணிமனைச் செய்திகள்**

# முல்லையில் முஸ்லிம்கள்

மஹ்றூப் எம். சரிபு தமிழ் நெறி. விடுகை வருடம்

முல்லை மாவட்ட முஸ்லிம்கள் மிக நீண்ட காலமாக இங்கேயே வாழ்ந்து வந்த சுதேசிகளின் வழி வந்தோராவர். நாட்டின் பிற இடங்களில் இருந்து இங்கு வந்த முஸ்லிம்களும் சுதேசிகளும் கலந்து வாழ்ந்து வந்ததன் மூலம் முஸ்லிம்களின் பரம்பரை இங்கு நிலை கொண்டதாக கருதப்படுகின்றது. மாவட்ட சனத்தொகையில் (1991) 4.75% கொண்ட சுமார் 7500 முஸ்லிம்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

தண்ணீரூற்று, நீராவிப்பட்டி, ஹிஜ்ராபுரம், முல்லைத்தீவுப் பட்டினம், முறிப்பு, முத்து ஐயன்கட்டு, தண்ணி முறிப்பு, பாலக்கட்டுவான், சிலாவத்தை, அளம்பில், கள்ளப்பாடு, குமாரபுரம், பூதம் வயல், கேப்பா பிலவு, களிக்காடு, குமுளமுனை, ஒதியமலை ஆகிய இடங்களில் முஸ்லிம்களின் குடியிருப்புகள் காணப்படுகின்றன. (1990ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ம் திகதியன்று இங்குள்ள முஸ்லிம்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் புலிகளால் முற்றாக வெளியேற்றப் பட்டு விட்டனர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது) ஐரோப்பிய சாதியரின் ஆட்சிகாலங்களில் எற்பட்ட மதவிரோத செயற்பாடுகளால் பாதிப்புற்ற முஸ்லிம்கள் வடபகுதியின் காடடர்ந்த பகுதிகளுள் குடியேறித் தமது சமயத்தைப் பேணிக்காத்து வந்தனர் என்பதை வரலாறு மூலம் அறியக்கிடைக்கின்றது. இவ்வாறு வந்த முஸ்லிம்களில் ஒரு பிரிவினரே முல்லைத்தீவில் குடியேறினர் எனவும் கருதப்படுகின்றது.

மன்னார், யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் குடியிருந்த முஸ்லிம்கள் வியாபார நோக்குடன் முல்லை மாவட்டத்திலே உள்ள முக்கிய இடங்களில் குடியேறி தமது தொழில்களில் கவனம் செலுத்தி வந்தனர். என்றொரு கருத்தும் தெரிவிக்கப்படுகின்றது. முல்லை மாவட்டத்திலிருந்து முற்றாக வெளியேற்றப்படும் வரை முல்லைப் பட்டினம் முஸ்லிம்களின் ஆதிக்கத்தின் கீழேயே இருந்து வந்தது என்பது ஈண்டு கவனிக்கத்தக்கது. முத்து ஐயன்கட்டு, முறிப்பு, தண்ணிமுறிப்பு, பாலக்கட்டுவன் நீராவிக்குளம் போன்ற குளக்கரைகளின் அண்மையில் முஸ்லிம்களுக்கான காணிகள் இருக்கின்றன என்பது இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்த உதவுகின்றது.

எமது பகுதியின் முதியவர்கள் சிலரிடம் இது விடயமாகத் தொடர்பு கொண்டு: முல்லை முஸ்லிம்களின் வரலாறு பற்றி வினவிய போது மேலும் பல முக்கிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

குமாரபுரத்தில் வசித்து வந்த ஆதம் பாவா (92) என்பவர் முல்லை முஸ்லிம்களின் ஆரம்பக் குடியிருப்பு பாலாற்றங்கரை எனவும் இது இன்றைய கணுக்கேணிப் பகுதியெனவும் குறிப்பிடுகிறார். நித்தகைக் குளத்திற்கு மேலேயுள்ள ஒரு இடத்தில் முஸ்லிம்களில் சிலர் குடியேறினர். இங்கு "கதிரிமீரா" என்பவர் குளம் ஒன்றைக் கட்டி, விவசாய விருத்திக்கு உதவியதாகவும் கூறப்படுகின்றது. இன்று இக்குளம் "காதிரிமீரா குளம்" என்றே அழைக்கப்படுவதாகவும் பதிவுகளிலும் அவ்வாறே காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். முஸ்லிம்களுக்கான காணிகள் இன்றளவும் அங்கேயுள்ளன என்பது இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

மேலே காட்டப்பட்ட பகுதிகளில் முஸ்லிம்கள் விவசாய வசதிகளுக்காக தமது இருப்பிடங்களை சற்றே நகர்த்தி இறக்கொழு, இறம்பாமம், பாலகட்டுவான், புண்ணியரங்கன் குளம், நரியொட்டு போன்ற இடங்களில் விவசாயத்தில் ஈடுபட்டு வந்தனர். இப்பகுதியில் இன்று வரையும் முஸ்லிம்களுக்கான நிலபுலன்கள் இருந்து வருகின்றன. இப்பகுதியில் விவசாய நிலங்கள் திருப்தியான முறையில் இருந்து வந்ததால் இப்பகுதியை அண்டிய தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி போன்ற இடங்களில் தமது குடியிருப்புக்களை ஆக்கிக் கொண்டு இங்கேயே நிரந்தரமாக வாழத் தொடங்கினர் என்பது இவரது கருத்தாகும்.

முல்லை மாவட்டத்து முஸ்லிம்களின் பரம்பரையினர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருத்து தெரிவிக்கும் முதியவர்கள் சிலர் "பஞ்சி" "கோதாரி" "அவயள்" "அங்கை" போன்ற பேச்சு வழக்குச் சொற்களை உதாரணம் காட்டித் தமது கருத்திற்கு வலுச்சேர்க்கின்றனர். ஆனால் இப்பகுதி முஸ்லிம்களால் பயன்படுத்தப்படும் "பேந்து" என்னும் வழக்குச் சொல் யாழ் முஸ்லிம்களால் பயன்படுத்துவதில்லை என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது. "பேந்து" எனும் சொல் தமிழ் மக்களால் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற வழக்குச் சொல்லாகும். இது ஆய்வுக்குறியது.

இஸ்லாமியத் தமிழ் தொண்டு பற்றி எழுதிய பேராசிரியர் மு. சாயபு மரைக்கார் என்பவர் (தமிழ்த்துறைத் தலைவர், கலைக் கல்லூரி காரைக்கால் இந்தியா) இந்தியாவிக் காரைக்கால் பகுதியில் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் வியாபாரத்திற்காக இலங்கை போன்ற பிறநாடுகளுக்கு புலம் பெயர்ந்தனர் எனக் குறிப்பிடுகிறார்.

அத்துடன் ஏனம் (பாத்திரம்) மிளகு தண்ணி (ரசம்) சத்தி (வாந்தி) ஆணம் (குழம்பு) கரிசனம் (பாசம்) கொடி (கழுத்திலணியும் பொற்சங்கிலி) படிக்கம் (எச்சில் உமிழும் பாத்திரம்) முடா (பெரும் பானை) போன்ற பேச்சு வழக்குச் சொற்கள் அவர்களுக்குறியது என்றும் குறிப்பிடுகிறார். (பார்க்க: இஸ்லாமிய தமிழ்த் தொண்டு பக்கம் 176 180 கங்கை புத்தக நிலையம், சென்னை 17 (1986) இவர் இங்கு குறிப்பிடும் பேச்சு வழக்குச் சொற்களுள் பெரும்பாலானவை முல்லை மாவட்ட முஸ்லிம்களது பேச்சு வழக்கிலும் பயன்படுத்தப்பட்டு வருவது கவனிக்கத்தக்கது. இதுவும் ஆய்வுக்குறியதே.

தண்ணீரூற்றில் அமைந்துள்ள முகைதீன் ஜும்ஆ பள்ளி வாசல் அகன்ற தூண்களையும், பெரிய அகலமான சுவரையும் விறாந்தையையும் கொண்டு ஒல்லாந்தர் கால கட்டட அமைப்பினைப் பின்பற்றிக் கட்டப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஒல்லாந்தர் காலத்தில் பள்ளி வாசல் கட்டி நிரந்தரமாக முஸ்லிம்கள் வாழத் தொடங்கியுள்ளமை தெரிய வருகின்றது. குமாரபுர பகுதியில் சூபி ஒருவரின் சியாரத் அமைந்துள்ளது. இதனை "பக்கீர் ஒலியுல்லா கபுரடி" என்று முஸ்லிம்கள் அழைத்து வருகின்றனர். மார்க்க அறிவை புகட்ட வந்த ஆலிமாக இவர் இருக்கலாம் எனக் கருத முடிகிறது. ஆயினும் இது தொடர்பாக எந்த விளக்கமும் எழுத்துருவில் இல்லாதது கவலைக்குறியதே.

இன்று வரையும் முல்லை மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு எழுத்துருவில் இல்லாதது துரதிஷ்டவச மானதே! விவசாயிகளாகவும், வியாபாரிகளாகவும் விளங்கிய எமது மாவட்ட முஸ்லிம்கள் உலகியல் ரீதியில் அதிக கவனம் செலுத்துவதைத் தவிர்ந்து மறுமை பற்றிய கண்ணோக்கில் தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டதே இதற்கான பிரதான காரணமாகும். எனவே முல்லை மாவட்ட முஸ்லிம்களின் "வரலாறு" பற்றிய விடயத்தில் கற்றோரும், மற்றோரும் அதிக கவனம் செலுத்தி அதனை எழுத்துருவில் கொண்டு வர முயற்சிப்பது கட்டாயத் தேவையாகும். ஏனெனில் தன் வரலாற்றை அறிந்த சமூதாயம் தன் கண்ணியத்தை காப்பாற்றி அதற்காகத் தொடர்ந்துழைத்துவரும் (நீதியரசர் எம்.எம்.ஏ. காதர்) என்பது அறிஞர் வாக்காகும்.

இங்குள்ள மக்களில் பெரும்பாலோர் மேலே காட்டப்பட்டது போல் விவசாயிகளாகவும், வியாபாரிகளாகவும் தொழில் செய்வதுடன் கடற்தொழிலும், இராச சேவையிலும், சுய தொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

பால்தாண்டமடு, இறக்கொழு, இறம்பாமம், வீரங்கிராயன் வெளி, பாலையடி முடக்கு, நரியொட்டு, பாவங்க, நீராவிக்குளம், அளம்பில், சிலாவத்தை, பாலத்தடி போன்ற இடங்களில் விவசாய முயற்ச்சிகளில் பெருமளவில் ஈடு பட்டு வந்தனர்.

இதனால் உணவு உற்பத்தியில் தன்னிறைவுள்ள ஒரு சமூதாயமாக எமது சமூகம் திகழ்ந்து வந்தது.

நதிக்கடல், நாயாறு, கொக்கிளாய், சாலா, வட்டுவாகல், சுண்டிக்களம், செம்மலை, குமுளமுனை போன்ற கடற்பிரதேசங்களிலும் முறிப்புக்குளம், தண்ணிமுறிப்புக்குளம்,

முத்து ஐயன்கட்டுக்குளம், பாலக்கட்டுவான் குளம், கல்தாண்டமடு, போன்ற பிரதேசங்களிலும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். குறித்த பருவங்களில் இடம் பெறும் இறால் பிடித்தொழில் மூலம் முஸ்லிம்கள் பொருளாதாரத்தில் முதன்மை பெற்று விளங்கினர். முல்லைப்பட்டினம், தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, ஹிஜ்ரா புரம், முறிப்பு ஒட்டிசுட்டான் போன்ற இடங்களில் வியாபாரிகளாக முஸ்லிம்கள் பலர் தொழில் புரிந்து வருவதை அவதானிக்கலாம். சிறிதும் பெரிதுமான பல கடைகளையும், வியாபாரஸ்தளங்களையும் முஸ்லிம்கள் கொண்டிருந்தனர். இதே போன்று கயிறு திரித்தல், பற்பொடி தயாரித்தல் தும்புத்தடி செய்தல், விளக்குமாறு கட்டுதல், இனிப்புப் பொருட்கள் தயாரித்தல் போன்ற பல சுயதொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தனர்.

கால் நடை வளர்ப்பின் மூலம் பலர் தொழில் வாய்ப்பினை பெற்றுள்ளனர். ஆடு, எருமை, பசு, கோழி என்பன பாரிய அளவில் முஸ்லிம்களுக்கு சொந்தமாக இருந்தன. மாடு, கோழி இல்லாத வீடுகளே இல்லை எனுமளவிற்கு ஒவ்வொரு குடும்பத்தினரும் கால் நடை வளர்ப்புடன் தொடர்புடையோராய் இருந்து வந்தனர். நெய், பால், தயிர், முட்டை, இறைச்சி என்பன நாளாந்த உணவின் பகுதிகளாக விளங்கி வந்தன. இது தவிர நெல் குற்றும் ஆலைகள், போக்குவரத்துச் சாதனங்கள், உழவு இயந்திரங்கள் போன்றவை மூலமும் பலர் தொழில் வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். ஒரு குடும்பத்தில் ஒருவராவது தையல் தொழில் தெரிந்தவராக இருந்தமை இப் பகுதியின் விஷேடமாகும்.

முல்லை முஸ்லிம்கள் எழுத்தறிவை பொறுத்தவரை தேசிய எழுத்தறிவு வீதத்தை விட (87.2%) உயர் நிலையில் (92.2%) இருப்பதை அவதானிக்க முடியும். இது தேசிய முஸ்லிம் எழுத்தறிவை (79.3%) விடவும் 12.9% அதிகமானது.

என்பதும் குறிப்பிடத்தக்கது. வடபுலத்தில் கல்வியறிவு வீதத்திற்கு எந்த வகையிலும் சளைக்காத வகையில் முல்லை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி விருத்தியடைந்து வருவதை இந்த கணிப்பீடு உணர்த்தி நிற்கிறது. G.C.E. O/L, A/L பரீட்சையில் சித்தியெய்திய பலர் இங்கே இருக்கின்றனர். இவவளர்ச்சிக்கு தண்ணீரூற்று மு.ம.வி. முல்லைத்தீவு மு.வி முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி என்பன பாரிய தொண்டாற்றியுள்ளன.

இங்கு கல்வி கற்றவர்களில் பலர் அரசாங்க உத்தியோகங்களில் ஈடுபட்டவருகின்றனர். இங்குள்ள படித்தவர்களில் பெரும்பாலோர் ஆசிரியராகவேயுள்ளனர். இன்னும் பலர் நாட்டடின் பல பகுதிகளுக்கும் சென்று மௌலவிமார்க ளாகவும், ஆலிம்களாகவும் பட்டம் பெற்றுள்ளனர். இதற்கு தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம், முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் அமைந்திருந்த மத்ரஸாக்களே அடிப்படையாக இருந்தது என்றால் இது மிகையாகாது.

கலைகளை பொறுத்தவரை முல்லை மாவட்ட முஸ்லிம்கள் தனித்துவமான போக்கையே கொண்டிருந்தனர். இவர்கள் கம்பு விளையாட்டு, சீனடி, கோலாட்டம் போன்றவற்றில் ஈடுபட்டு வந்தனர். கோலாட்டத்தின் போது இஸ்லாமிய சம்பவங்களைக் கருவாகக் கொண்டிருந்த பல பாடல்கள் இசைக்கப்படுவது வழக்கமாகும். இவ்வாறு பாடல்களைப் பாடுபவர்கள் அண்ணாவி என்றழைப்பர். இவர் பாட்டுக்களை இயற்றும் வல்லமையைப் பெற்றிருந்தார். நீராவிப்பிட்டிப் பகுதியில் மிஸ்கீன் புலவர் எனும் கவிஞர் வாழ்ந்து வந்தார் இவரால் நிறையப் பாடல்கள் எழுதப்பட்டிருந்தன. ஓலைச்சுவடுகளாக இருந்த அக்கவிதைகள் யாவும் பதிப்பிப்போர் எவரும் இல்லாததால் அழிந்து விட்டன. 1964ல் பயங்கர சேதத்தை விளைவித்த சூறாவளியின் அழிவுகள் பற்றி இவரால் எழுதப்பட்ட மிகச் சிறந்த கவிதைகள் (காலக்குழப்படி) யாவும் செல்லரித்து இன்று செல்லாக்காசுகளாகி விட்டமை மனம் வருந்தத் தக்கதே. சுமார் 100 வருடங்களக்கு முன்னர் கூடு, கந்தூரி, கொடி என்பனவும் இங்கு இடம் பெற்றிருந்தமை முதியோர் மூலம் அறிய முடிந்தது. புலி ஆட்டம் என்றொரு ஆட்டம் கூடு எடுக்கும் போது ஆடப்படுவது வழக்கமாகும். பையன்னா அப்பா என்பவர் இவ்விளையாட்டில் சிறந்து விளங்கியதாக முதியவர்கள் தெரிவித்தனர்.

> *நபியே! எதைப்பற்றி உமக்கு தீர்க்கமான அறிவு இல்லையோ அதனைத் தொடராதீர். ஏனெனில் நிச்சயமாக செவி, பார்வை, இதயம், ஆகிய ஒவ்வொன்றும் இதனைப் பற்றி மறுமையில் விசாரிக்கப்படக்கூடியதாக இருக்கிறது.*
>
> (பனூஇஸ்ராயீல் — 36)

இஸ்லாமிய அறிஞர்களின் போதனைகளாலும் தப்லீக் ஜமாத்தின் செயற்பாட்டினாலும் மேலே காட்டப்பட்ட கூத்துக்கள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோலாகி விட்டது. தப்லீக் ஜமாஅத்தின் செயற்பாட்டினால் சிறு சிறு கட்டடங்களில் இருந்த பள்ளி வாசல் யாவும் புனரமைக்கப்பட்டு புது வடிவம் பெற்றன. நீராவிப்பிட்டி பள்ளிவாசல், ஹிஜ்ராபுர பள்ளி வாசல், தண்ணீரூற்று பள்ளி வாசல், முத்து ஐயன் கட்டு பள்ளி வாசல் என்பன இவ்வாறு புத்தெழுச்சி பெற்ற பள்ளிகளுற் சிலவாகும். முறிப்புப் பகுதியிலும் ஜும்ஆப் பள்ளி வாசல் ஒன்று கட்டப்பட்டு தொழுகைக்கான பணிகள் இடம்பெற்றுள்ளன. அதிகமான மக்கள் தொழுகையின் பக்கம் ஒன்று சேர்வதற்கு தப்லீக்கின் செயற்பாடுகள் உறுதுணை புரிந்தன என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இங்குள்ள மக்கள் உத்தி, கிளித்தட்ட, யாட்டு போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களிலும் கரப்பந்து, கால்பந்து, கிரிகெட் போன்றவற்றிலும் அதிக ஈடுபாட்டுடன் கலந்து கொண்டனர். இதற்கான ஜின்னா வி.க, ஸ்டார் வி.க, நளீமியா வி.க, இஸ்லாமிய ஐக்கிய வி.க, இளைஞர் வி. கழகம் பொன்ற பல விளையாட்டுக் கழகங்கள் செயற்பட்டு வந்தன. Y.M.M.A, ஹபீப்மார்கள் சம்மேளனம், முஸ்லிம் லீக் போன்ற அகில இலங்கை ரீதியான அமைப்புக்களும் இவற்றில் ஈடுபாடு காட்டி வந்தன. மேலே காட்டப்பட்ட அமைப்புக்கள் யாவும் சமூக சேவையிலும் ஈடுபட்ட வந்துள்ளமை அவதானிக்க முடிந்தது.

எமது பகுதியில் அரசியல் பற்றியும் சிறிது குறிப்பிட வேண்டியது அவசியமாகும். ஆரம்ப காலங்களில் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரசு, அடங்காத் தமிழர் கட்சி ஆகியவற்றுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த மக்கள் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பால் தமது கவனத்தைச் செலுத்தினர். காலச் சுழற்சியில் ஐ.தே.க, சி.ல.சு.க போன்றவையும் மக்களிடம் செல்வாக்குப் பெற்றன. ஆனாலும் முஸ்லிம்களிற் பெரும் பாலோர் தேசியக் கட்சிகளின் பின்னாலேயே நின்றதை இக்காலங்களில் அவதானிக்க முடிந்தது. அரசியலில் மிதவாதப் போக்கையே இவர்கள் கொண்டிருந்தனர்.

எமது பகுதியில் மிகவும் சிறந்த விஷக்கடி வைத்தியர் (லெ.மு. சாய்பு) இருந்தார். எந்த வகையான விஷக்கடிகளுக்கும் இவரால் மருத்துவம் செய்யப்பட்டு வந்தது. இதனால் மாவட்டத்தின் சகல பகுதிகளில் இருந்தும் இவரிடம் வைத்தியம் பார்ப்பதற்கு மக்கள் படையெடுத்த வண்ணம் இருப்பர். இவரால் நாட்டு வைத்தியமும் செய்யப்பட்டு வந்தது. இதனை இவர் இலவசமாக செய்து வந்தார் என்பது மனங்கொள்ளத்தக்கது.

# இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் வகையில் அமைந்துள்ள பேரினவாத கட்சிகளின் தீர்வுத்திட்டங்கள்



சர்வகட்சிக் குழுத் தலைவர் பேராசிரியர் திஸ்ஸவிதாரணவிடம் அரசியல் தீர்வு ஆலோசனையில் வடபுல முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள் எனும் தீர்வு யோசனையை மௌலவி சுபியான் கையளிக்கும் போது

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தினை அரசியலில் கட்சிகள் முன் வைத்துக் கொண்டிருக்கின்றன. சிங்களவர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளின் தீர்வுத்திட்ட யோசனைகள் பெரும்பாலும் பெரும்பான்மைச் சிங்களவர்களை மாத்திரம் கருத்தில் கொண்டுள்ளதாகவே இருக்கின்றன. தீர்வுத்திட்டம் யாருக்கு அவசியமோ அவர்களின் அபிலாசைகளையும், எண்ணங்களையும் புறக்கணித்த நிலையிலேயே தீர்வுத்திட்ட யோசனைகள் அமைந்துள்ளன.

> சிங்களவர்களை மாத்திரம் திருப்திப் படுத்தும் வகையில் கடந்த காலங்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் முன் வைக்கப்பட்டதனால்தான் நாடு மீள முடியாத யுத்த சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு பின்நோக்கிச் செல்வதாகவே இருக்கின்றது. தமிழ் பேசும் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற அதிகாரங்களையும், உரிமைகளையும் பிடுங்கிக் கொள்வதற்கே சிங்கள பேரினவாதம் எத்தனித்துக் கொண்டிருக்கிறது.

சிங்கள பேரினவாத கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு தீர்வு யோசனைகளை முன் வைத்த போதிலும் ஒரு கட்சியின் தீர்வு யோசனை மற்றைய கட்சியின் திர்வு யோசனை சுமந்து நிற்கின்ற இனவாதத்தை வெல்லும் வண்ணமாகவே உள்ளது. சிறுபான்மையினரின் மனங்களை வெல்வதற்கு பதிலாக குருகிய அரசியல் இலாபம் தேடும் வகையிலேயே தீர்வு யோசனைகள் உள்ளன. இதனால் சிறு பான்மைக் கட்சிகளும் மக்களும் பெரும் கவலையுடன் இருப்பதுடன் விசனமடைந்தவர்களாக காணப்படுகின்றார்கள்.

சிங்கள பேரினவாத கட்சிகள் முன் வைத்துள்ள தீர்வுத்திட்ட யோசனைகளுள் ஹெல உறுமயவின் தீர்வுத்திட்ட யோசனைகளே மிகவும் தாழ்ந்த நிலை தீர்வுத்திட்ட யோசனையாக சிறுபான்மையினத்தினரால் பார்க்கப்படுகின்றன.

ஹெல உறுமயவின் தீர்வுத்திட்ட யோசனையின் படி நாட்டை ஆள்வதற்கான ஏகபோக உரிமை சிங்களவர்களுக்கே உரித்தானது. சிங்களவர்களே நாட்டின் தேசிய உரிமையுடைய இனத்தவர்கள். ஒற்றையாட்சி என்ற கட்டமைப்பின் கீழேயே ஆட்சி முறைமை இருக்க வேண்டும்.

நாட்டின் கலை, கலாச்சார, கட்டமைப்பை உறுவாக்கியவர்கள் சிங்களவர்கள். அதனால் அவர்களே நாட்டின் தேசிய இனமாக கருதப்பட வேண்டும். நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை. தேசிய மதமாக பௌத்தம் கணிக்கப்பட வேண்டும். ஏனைய மதங்கள் இருக்கலாம் ஆனால் பௌத்த மதமே ஏகபோக உரிமை கொண்ட மதமாக இருக்கும் என்ற அடிப்படையில் அக்கட்சியின் தீர்வு யோசனை அமையவிருப்பதாக கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார். அத்தோடு மேலும் சில முன் மொழிவுகளையும் கூறியுள்ளார்.

சிங்களவர்களை மாத்திரம் திருப்திப் படுத்தும் வகையில் கடந்த காலங்களில் இனப்பிரச்சினைக் கான தீர்வுகள் முன்வைக்கப்பட்டதனால்தான் நாடு மீள முடியாத யுத்த சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

சிங்களவர்களின் நலனை மேம்படுத்துவதற்காக 1956ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சிங்கள மொழிச் சட்டம் 1972ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு 1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பு மற்றும் நாட்டின் தேசியக் கொடி, தேசியக் கீதம், விடுமுறை நாட்கள், தேசிய அடையாளங்கள் போன்றன சிங்களவர்களின் கலாச்சாரத்தையே பிரதிபலிக்கின்றன.

இதனால் சிறு பான்மையினர் புறம் தள்ளப்பட்டு வருவதாக உணர்ந்துள்ளார்கள். அதனை வெளிப்படையாக ஆட்சியின் பொறுப்பாளர்களிடம் எடுத்துக் கூறியும் வந்துள்ளார்கள்.

ஆயினும் சிங்களப் பேரினவாதம் மேற்படி யாப்புகள் மற்றும் பலவற்றால் திருப்தியடைந்திருப்பதாக இல்லை. தமிழ் பேசும் மக்கள் நாட்டில் சிங்களவர்களைவிட கூடுதலான உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது போலவே தீர்வுத்திட்ட யோசனைகளை முன்வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சிங்கள பேரினவாதம் இலங்கையர் கட்டமைப்புக்குள் நின்று சிந்திக்காது. இனத்துவ ரீதியாக சிந்தித்து அந்த இனத்து அடையாளத்தை வெற்றிபெறச் செய்யவும் விளைந்ததன் காரணமாகவே குருகிய அரசியல் சிந்தனைகள் எல்லா தரப்பினரிடையே தலைவிரித்தாடுகின்றது.

துட்டகைமுனு மன்னன் காலத்திலிருந்தே இலங்கையின் அரசியில் பௌத்த பிக்கு மார் செல்வாக்குச் செலுத்தியுள்ளார்கள். 1940ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பிக்கு பலவேகய என்ற பௌத்த பிக்குகளின் இயக்கம் இலங்கையின் அரசியலில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தது. இந்த இயக்கம் பௌத்தர்களுக்கிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தது. இதனைத் தொடர்ந்து பௌத்த பிக்குமார் ஒவ்வொரு ஆட்சி காலத்திலும் ஆட்சியாளர்களை ஆட்டுவிப்பவர்களாக இருந்துள்ளார்கள்.

இவர்களின் முழுச் சிந்தனையும் பௌத்த மதத்தையும், பௌத்த சிங்களவர்களையும் பாதுகாப்பதும் அவர்களின் நலன்களை மேம்படச் செய்வதற்கும் ஆட்சியாளர்களை வற்புறுத்துவது மாகவே இருந்தன. ஆதலால் இவர்கள் நாட்டிலுள்ள ஏனைய இனத்தவர்களையும், மதங்களையும் கருத்தில் கொள்ள வில்லை.

மேற்படி கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் இலங்கையில் இன ரீதியான சிந்தனையும் அதனை ஒட்டிய நடைமுறையும் மன்னர் ஆட்சிக் காலத்திலும் காலனித்துவ ஆட்சி காலத்திலும் நிலவியுள்ளதென்பது தெளிவாகின்றது.

இவ்வாறு ஆட்சியாளர்களை தமது சிந்தனைக்கு ஏற்ப செயற்படுத்திய பௌத்த பிக்குகள் திருப்தி காணாத நிலையில் தேர்தல் களம் சந்தித்து பாராளுமன்றம் வரை சென்றுள்ளார்கள்.

அவர்கள் நாட்டை பௌத்தர்கள் ஆள வேண்டும் என எல்லாவற்றிலும் பௌத்த சிந்தனைகளைப் புகுத்துவதற்கு காய் நாகர்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

நாட்டின் ஏகபோக உரிமையும், நாட்டின் தேசிய இனமும் சிங்களவர்களுக்கே உண்டு என்று துணிவு கொள்ளும் அளவுக்கு அப்பாவி சிங்கள மக்களிடையே கருத்துக்களைப் பரப்பிக் கொண்டு வருகின்றார்கள்.

இவர்களின் இந்த நிலைப்பாடு சிங்களவர்களக்கிடையே சிறுபான்மையினரைப் பற்றிய தப்பான அபிப்பிராயங்களை விதைக்கவே செய்யும். தப்பான எண்ணங்களும் வெளிப்பாடுகளும் குருகிய நிலையும் சுக்குநூறாக்கிக் கொண்டிருப்பதனைக் கருத்தில் கொள்ளாமலும் வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளாமலும் சிங்களப் பேரினவாதம் தொடர்ந்தும் செயற்படுமாயின் நாட்டின் பொருளாதாரம், கலை, கலாச்சாரம், ஐக்கியம் போன்றன மேலும் சிதைவடைந்து போய்விடும் என்பதில் யாரும் ஐயப்படத் தேவையில்லை.

இந்த நாட்டின் தேசிய இனம் சிங்களவர்கள் தான். என்று சிங்கள பௌத்த மேலாதிக்கச் சிந்தனைவாதிகள் பன்நெடுங் காலமாகக் கூறி வருகின்றார்கள். ஆனால் சிங்களவர்களுக்கு எப்படி நீண்ட வரலாறு இந் நாட்டில் இருக்கின்றதோ அதே போன்று தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கும் நீண்ட வரலாறு உண்டு. அதனால் சிங்களவர் மட்டுமன்றி தமிழர்களும், முஸ்லிம்களும் இந்நாட்டின் தேசிய இனங்களாவர். சிங்களவருக்கு இருக்கின்ற சகலவிதமான உரிமைகளும் ஏனைய இனங்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இதுவே சிறு பான்மைச் சமூகங்கள் வேண்டி நிற்கின்ற நியாயமான கோரிக்கையாகும். இலங்கை குடிமக்களின் பூர்வீகம் 2000ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என அறிய முடிகின்றது. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுப் பகுதியில் வடஇந்தியாவிலிருந்து வந்து குடியேறிய ஆரிய வகுப்பினரும் இலங்கையின் ஆதிவாசிகளும் சேர்ந்த மக்கள் இனமே சிங்களவர்கள் என்று கூறப்படுகின்றது. இலங்கையின் இரண்டாவது இனமாகவுள்ள தமிழர்கள் திராவிட இனத்தவர்கள். இவர்களின் பூர்வீகம் பழைமையானது. கிரிஸ்து யுகத்துக்கு முன்னரே தமிழர்கள் இலங்கையில் வாழ்ந்து வருவதாக தமிழர் வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து முஸ்லிம்கள் இலங்கையில் வாழ்ந்து வருகின்றார்கள். இந்நூற்றாண்டுப் பகுதியில் இலங்கையின் முக்கி நகரங்களிலும் துறைமுகங்களை அண்மிய இடங்களிலும் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்திருப்பதாக சேர். அலக்ஸாண்டர்

ஸோன்ஸ்ற்றன் எமர்ஸண்ட் டெனன்ட் ஆகியோர் கூறும் வரலாற்றுக் குறிப்புக்களிலிருந்து தெரிகின்றது.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் அரேபியாவில் இஸ்வாம் போதிக்கப்பட்ட காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட முஸ்லிம்களாயிருந்துள்ளார்கள் எனவும் தகவல்கள் கூறுகின்றன.

இப்படியாக இருக்கின்ற போது சிங்களவர்கள் மட்டும் நீண்ட வரலாற்றையுடையவர்கள் என்று வாதிடுவதும் தேசிய இனம் எனக் கூறுவதும் வரலாற்றைத் தவராக அடையாளப்படுத்தப்படும். சிங்களவர் தமிழர்கள் முஸ்லிம்கள் அதிகாரத்துக்கு இப்படியாக சான்றுகளை முன்வைத்துக் கொண்டு போராடிக் கொண்டிருக்கும் அதே வேலை இலங்கையின் ஆதிக் குடியிருப்புகளாகவுள்ள வேடர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். இவர்களுக்கு இந்நாட்டில் எந்தவொரு அதிகாரங்களும் வழங்கப்படாதிருப்பதனையும் சுட்டிக்காட்டியாக வேண்டியுள்ளது.

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கும் நடவடிக்கை இன்றுள்ள ஹெல உறுமய கட்சியினால் மட்டுமன்றி ஏனைய கட்சிகளினாலும் அரசியல் யாப்புக்கள் மூலமாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பௌத்த விகாரைகள் அரசாங்கத்தின் செலவுகள் மூலமாக புனரமைப்பும், விஸ்தரிப்பும் மேற்கொள்ளப்படும் அதே வேளை கோயில்கள், பள்ளிவாசல்கள் போன்றவற்றுக்கு நிறம் பூசுவதற்குக்கூட உண்டியல் வைத்துக் காசு சேர்க்க வேண்டிய அவல நிலை தொடர்கின்றது. கோயில்கள், பள்ளிவாசல்களுக்கு அரசாங்கத்தின் கவனிப்பு இருந்த போதிலும் பௌத்த விகாரைக்கு வழங்கப்படும் கவனிப்புடன் ஒப்பிடும் போது மிகமிக தாழ்மை நிலையிலேயே இருக்கின்றன.


நினைத்த இடங்களில் பௌத்த விகாரைகளை நிறுவியும் புத்தர் சிலைகளை ஏற்படுத்தியும் தமிழ், முஸ்லிம்களின் பாரம்பரிய காணிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந் நடவடிக்கை இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

இத்தகைய குருகிய சிந்தனைகளிலிருந்து சிங்கள மேலாதிக்கவாதிகள் விடுபட வேண்டும். பெரும்பான்மை சிங்களவர்கள் ஆட்சியின் பொறுப்பாளர்களாக இருப்பதில் எந்த வொரு ஆட்சேபனையும் இல்லை. ஆனால் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்குரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும். 1956இன் மொழிச்சட்டம் 1972ஆம் 1978ஆம் அரசியல் யாப்புகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் எல்லாம் சிறுபான்மை யினரிடையே இருந்து வந்த சந்தேகங்களையும் அச்சத்யையும் அதிகரிக்கவே செய்துள்ளன. இதனால் தமிழ் பேசும் தலைவர்களுக்கும் சிங்களத் தலைவர்களுக்கு மிடையே பிளவுகளை அதிகரிக்கச் செய்ததோடு இன முரண்பாடுகளையும் மேலோங்கச் செய்துள்ளன.

> இந்த நாட்டிலே தேசிய இனம் சிங்களவர்கள் தான் என்று சிங்கள பௌத்த மேலாதிக்கச் சிந்தனைவாதிகள் பன்நெடுங் காலமாகக் கூறி வருகின்றார்கள். ஆனால் சிங்களவர்களுக்கு எப்படி நீண்ட வரலாறு இந் நாட்டில் இருக்கின்றதோ அதே போன்று தமிழ், முஸ்லிம் சமுகங்களுக்கும் நீண்ட வரலாறு உண்டு.

இதே வேளை சிறுபான்மையினரின் தயவின்றி ஆட்சி அமைக்க வேண்டும் என்ற மற்றொரு அத்தியாயத்தை அரங்கேற்றவும் பெரும்பான்மை பேரினவாதம் விளைகின்றது. தேர்தல் மறுசீரமைப்பு என்ற தோரணையில் சிறுபான்மைச் சமூகங்களின் பிரதி நிதித்துவத்தை இல்லாமல் அல்லது குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படு கின்றன. இதனை சிறுபான்மைக் கட்சிகள் கடுமையாக எதிர்க்கின்றன. அத்தோடு சிறு சிங்களக் கட்சிகளும் எதிர்க்கின்றன.

எனவே பெரும்பான்மையினர் வரலாற்றிலிருந்து பாடம் படித்து நாட்டுக்கு நல்லது செய்வதற்கு பதிலாக தனியே சிங்கள சமூகத்துக்கு மாத்திரம் நன்மை செய்து நாட்டுக்கு தீமை செய்து கொண்டிருக்கிறார்கள். நாட்டின் மேல் ஏற்படும் தீமைகள் சிங்களவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனை உணராது நாளை ஆட்சியை எப்படிப் பிடிக்கலாம் என்று சிந்தித்து சிங்களவர்களின் உணர்வுகளுக்கு தீனி போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த சூழ்நிலை சிந்தனை மாறாத வரையில் நாட்டில் சமாதானத்தைக் காண முடியாது



வடபுல முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தின் 16வது வருட நினைவு நிகழ்ச்சிகளில் அரங்கேற்றப்பட்ட "நெஞ்சம் மறப்பதில்லை" எனும் நாடகத்தின் போது.

# மக்கள் பணிமனையின் கோரிக்கைக்கு கிடைத்த வெற்றியே உலக வங்கியின் புத்தளம் வீட்டுத் திட்டம்

உலக வங்கியின் வீட்டுத்திட்டம் புத்தளம் நடைமுறைப்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. இத்திட்டம் தொடர்பான உண்மைகள் மக்களுக்கு மறைக்கப்படுகின்றது. இத்திட்டத்தின் உண்மயான சூத்திரவாதிகள் பற்றி மக்களுக்கு பிழையான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.

எனவே இவ் வீட்டுத் திட்டம் தொடர்பான சில உண்மைகளை மக்களின் கவனத்திற்கு தருகின்றோம்.

எதிர் வரும் காலங்களில் இன்னும் பல் வேறு பட்ட செய்திகளையும் உலக வங்கியின் புத்தளம் வீட்டுத்திட்டம் தொடர்பாக மக்களுக்கு விளக்கம் தருவதற்கும் இருக்கின்றோம்.

புத்தளம் வீட்டுத்திட்டம் தொடர்பாக முதலாவது வேண்டுகோளும் புத்தளத்திற்கு நேரடியாக வந்து நமது மக்களின் நிலையை பார்வையிடுவதற்கான அழைப்பையும், மக்கள் பணிமனையின் தலைவர் 8ம் திகதி மே மாதம் 2003ல் முன்னாள் உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதியாக இருந்த பீட்டர் ஹேரலிடம் விடுத்தார்.

இதன் அடிப்படையில் அடுத்த இரு வாரத்தில் பீட்டர் ஹேரலோட் புத்தளத்திற்கு வருவதாக உத்தேசித்து உலக வங்கியின் பிரதிநிதிகளுடன் புத்தளத்திற்கு விஜயம் செய்து முகாம்களைப் பார்வையிட்டு மக்களுடன் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் கேட்டதுடன் புத்தளம் கச்சேரியிலும் இது தொடர்பான கூட்டத்தினையும் நடாத்தினார்.

இதன் போது எமது கோரிக்கையான வீட்டுத்திட்டம் தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கும் போது இக்கோரிக்கையானது உலக வங்கியின் கொள்கைக்கு அப்பாற்பட்டது.

உலக வங்கியானது நிரந்தரமாக சொந்த இடத்தில் மீளக்குடியேரியவர்களுக்கே வீட்டைக் கட்டுவதற்கு மானிய உதவிகளை செய்கின்றது. அதனால் புத்தளத்தில் தற்காலிகமாக குடியிருக்கும் வடக்கு மக்களுக்கு உதவி செய்வதற்கு முடியாத விடயம். எனினும் உங்கள் தேவை என்றால் சரியாக உணரப்பட்டுள்ளது.

இது பற்றி தலைமைச் செயலகத்திற்கு அறிவித்து அவர்களின் அனுமதி இதற்குக் கிடைக்கப் பெறுமாயின் இத்திட்டத்தினை முன்னெடுக்கலாம். எனவே நான் இதனை கொள்கை அளவில் ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறினார்.

இதன்பிறகு 16-2-2006ல் உலக வங்கியின் வீட்டுத்திட்டம் தொடர்பாக தீர்மானமும், செயற்படுத்துவது தொடர்பான விளக்கமும் மக்கள் பணிமனைத் தலைவருக்கு உலக வங்கியின் வதிவிடப்ப பிரதிநிதி பீட்டர் ஹேரலோட்டும் வீட்டுத்திட்ட பொறுப்பு அதிகாரி டாக்டர். பரராஜா நரேஷ துறைஸ்வாமி அவர்களும் அளித்தனர்.

இதன் பின்பு 24-03-2006 மீண்டும் சந்திப்பு எமது வேண்டுகோளுக்கிணங்க வட பகுதி பிரமுகர்களுக்கு உலக வங்கியின் தலைமையகத்தில் வைத்து மேற்படி இரு உலக வங்கியின் பிரதிநிதிகளினால் வழங்கப்பட்டது.

இதன் பின்பு 15-05-2006 உலக வங்கியின் அழைப்பின் பேரில் மீண்டும் வீட்டுத் திட்ட நடைமுறைகள் எதிர் நோக்கும் சவால்கள் பற்றி விரிவான கலந்துரையாடல் சில தீர்மாணங்களும் எடுக்கப்பட்டதுடன் அரசாங்கத்துடன் செய்யப்படும் ஒப்பந்தம் உலக வங்கி உள்வாங்க அரசாங்கத்தைக் கோரி வேண்டிய விடயங்களையும் தெளிவுபடுத்தப்பட்டது. இச்சந்திப்பு உலகவங்கியின் தலைமையகத்தில் நடை பெற்றது.

இது தவிர்ந்த மின்னஞ்சல் தொடர்புகளும் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கும், மக்கள் பணிமனைத் தலைவருக்கும் இடையில் பல இடம் பெற்றது.

அண்மையில் 06-07-2007 தற்போதைய உலக வங்கியின் உதவித்திட்ட பிரதிநிதி திருமதி. நவுகோ இஷியுடன் உலக வங்கியின்

அதிகாரிகள் இத்திட்டம் வளர்ச்சி தற்போதைய செயற்ப்பாடு மக்கள் அரசியல் அபிப்பிராயம் தொடர்பாக பத்து விடயங்கள் முன்வைக்கப்பட்டு அது ஆராயப்பட்டு தீர்மானங்களும் எடுக்கப்பட்டது.



உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி திருமதி நௌகோ இஷி மற்றும் புத்தளம் வீட்டுத் திட்டத்தின் திட்ட அதிகாரி டாக்டர் நரேஷ துரைசாமிநாதனுடன் மௌலவி சுப்யான்

01. இவ்வீட்டுத்திட்ட நடைமுறையினால் எமது மக்களின் தாயக உரிமை எக்காரணத்தைக் கொண்டும் எக்காலத்திலும் மறுக்கப்படக் கூடாது.

02. இவ்வீட்டுத்திட்டத்தினால் வடக்கில் பலவந்த வெளியேற்றத்திற்குள்ளான முஸ்லிம் மக்களுக்கு கிடைக்கவேண்டிய நியாயமான நஷ்ட ஈடுகள் கிடைப்பதற்குத் தடையாக எக்காலத்திலும் அமைந்து விடக் கூடாது.

03. இவ்வீட்டுத்திட்டத்தினை புத்தளத்தில் பெறுபவர்கள் தங்கள் சொந்த மாவட்டத்தில் உலக வங்கி தவிர்ந்த ஏனைய நிறுவனங்களின் உதவிகளைப் பெறுவதற்கு தடையாக அமைந்து விடாது என்பதற்கான உத்தரவாதம்.

04. வீட்டுத்திட்டத்தினைப் பெறுபவர்கள் வாக்குரிமை அவர்களது சொந்த மாவட்டத்திலேயே தொடர்ந்தும் பதிவதற்குள்ள ஏற்பாட்டில் மாற்றம் இருக்காது என்பதற்கான உத்தரவாதம்.

05. வீட்டுத்திட்டத்தில் முக்கியமான நிபந்தனைகளில் காணியுள்ளவர்களுக்கு என்றிருப்பதனால் காணி வாங்குவதற்கு வசதியற்றவர்களுக்கு அரசு காணி வழங்க வேண்டும். என்ற உலக வங்கியின் கோரிக்கையில் அரசு நடைமுறைப்படுத்துவதற்காக உலக வங்கி அரசை வலியுறுத்த வேண்டும்.

06. வீட்டுத்திட்ட நடைமுறையினால் இடம் பெயர்க்கப்பட்டவர்க்கும். உள்ளூர்மக்களுக்குமிடையில் ஏற்படப்போகும் வளப்பங்கீடு தொடர்பான பங்கீடு பிரச்சினைக்கு தீர்வு காண்பது

1. குடிசன விகிதாசாரத்தில் ஏற்படப்போகும் ஏற்றத்தாழ்வு.
2. கல்வி
3. தொழில் வாய்ப்பு
4. அரசியல் பிரதிநிதித்துவம்
5. அரச வேலைவாய்ப்பு

07. வீட்டுத்திட்ட செயற்பாட்டு நடைமுறையின் போது தகுதிகாண் அடிப்படையில் நிரல்படுத்தப்பட்ட முகாம்களில் விடுபட்டுள்ள ஏனைய முகாம்களை இணைப்பது.

08. வீட்டுத்திட்ட நடைமுறையின் போது ஏற்படலாம் என்று அஞ்சப்படும்

1. சுரண்டல்
2. ஊழல்
3. மோசடி
4. லஞ்சம்
5. அநீதி
6. முரண்பாடு

போன்றனவும் இவைகள் போன்ற முறைப்பாடுகளை உடனுக்குடன் ஆராய்ந்து பாதிக்கப்படும் மக்களுக்கு உடனடித் தீர்வுகாணும் முகமாக அதிகாரமளிக்கப்பட்ட இத்திட்ட செயற்பாடுகளில் உள்ள உலக வங்கி **UNHCR** பிரதிநிதிகளுடன் மற்றும் மக்களிடமிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைப்பதுடன் இதற்கான விஷேட காரியாலய வசதியை ஏற்படுத்துதல்.

09. இவ்வீட்டுத்திட்டத்தின் உலக வங்கியினதும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களினதும் சகல விடயங்களும் மக்களுக்கு தெளிவு இருக்கும் விதமான வெளிப்பாட்டுத் தன்மையும். பகிரங்கத்தன்மையும் உள்ளதான செயற்பாடு.

10. அரசியல் தலையீடு. அரசியல் பழிவாங்கள்கள் மற்றும் பிரதேச வாதம் எதுவும் இத்திட்டத்தில் இல்லாமல் பாதுகாப்பது.

**ஆகிய இவ்விடயங்கள் தொடர்பாக உலக வங்கி பிரதிநிதிகளுக்கும் மக்கள் பணிமனையின் பிரதிநிதிகளுக்கும் முன்னர் இடம் பெற்ற கலந்துரையாடல்களிலும் அவர்களின் கவனங்கள் ஈர்க்கப்பட்டுள்ளதால் இவற்றுள் சில விடயங்கள் உலக வங்கியினாலும் அரசாங்கமும், உலக வங்கியும் செய்துள்ள ஒப்பந்தங்களிலும் உள்ளடக்கப்பட்டிருப்ப தனால் இவ்விடயங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்களுக்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாகவும் உலக வங்கியின் பிரதிநிதிகள் உறுதி மொழியளித்துள்ளனர்.**

புத்தளம் பகுதியில் வீடுகள் அமைக்கவும் மற்றும் அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்ளவும் உலக வங்கி 3 கோடியே 20 லட்சம் அமெரிக்க டொலரை வட்டி இல்லாத இலகு கடனாக வழங்கி உதவியுள்ளது.

வீடமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு மீள் குடியமர்வு, அனர்த்தங்கள் நிவாரண சேவை அமைச்சு பொறுப்பாக இருக்கும். கடனை 20 வருடங்களில் திருப்பிச் செலுத்த வேண்டும். 10 வருடக் கருணைக் காலமும் உண்டு. வட்டி அறவே இல்லை. 0.75மு சேவைக்கட்டணம் மட்டும் அறவிடப்படும்.

கடன் ஒப்பந்தம் சமீபத்தில் செய்துகொள்ளப்பட்டது. உலக வங்கியின் வதிவிடப் பணிப்பாளர் நாகோ இஷியும் திறைசேரிச் செயலாளர் கலாநிதி பீ.பி. ஜெயசுந்தரவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

வீடமைப்பு, குடி தண்ணீர் வழங்கள், சுகாதாரச் சுற்றுச்சுழல் அபிவிருத்தித் திட்டங்கள், வீதிகள் புனரமைப்பு போன்றவற்றிற்குக் கடன் பயன்படுத்தப்படும். இவை நான்கு வருடங்களில் பூர்த்தியடையும்.

இடம் பெயர்ந்து வந்து கற்பிட்டி, முந்தல், புத்தளம், வண்ணாத்திவில்லு பகுதிகளில் தங்கியிருக்கும் 20.600 குடும்பங்களும் மற்றும் பலரும் இந்த திட்டங்களால் பயன் அடைவார்கள்.

வீடுகளைப் புதிதாக அமைப்பவர்களுக்கும், இருக்கும் வீடுகளைச் சீராக்கிக் கொள்வதற்கும் பணம் வழங்கப்படும். புதிதாக வீட்டை அமைப்பதற்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா. இருக்கும் வீட்டைச் சீராக்க ஒரு லட்சம் ரூபா.

வறுமை நிலை மற்ற இடங்களை விடப் புத்தளம் பகுதியில் அதிகமாக இருக்கிறது. அதை ஒழிப்பதற்கு அரசுடன் உலக வங்கி ஒத்துழைக்கும். இப்போதே புத்தளத்தில் சில திட்டங்களை உலக வங்கி நடைமுறைப்படுத்தி வருகிறது என்று நாகோ இஷி குறிப்பிட்டார். விரைவில் பலன் காணத் துடித்துக் கொண்டு இருக்கிறோம் என்றும் அவர் கூறினார்.

# நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மனித உரிமைப் பிரகடனம்

## இறுதி ஹஜ்ஜில் ஆற்றிய உரையின் சில பகுதிகள்)

புகழனைத்தும் இறைவனுக்கே உரியது! நாம் அவனையே துதிக்கிறோம்! அவனிடமே உதவி தேடுகிறோம்! அவனிடமே பாவமன்னிப்புக் கோருகிறோம்! அவன் பக்கமே நாம் மீளுகிறோம்! நம் மனத்தீங்கிலிருந்தும் நம் செயல்களின் தீமையிலிருந்தும் இறைவனிடம் பாதுகாவல் தேடுகிறோம்.

இறைவன் யாருக்கு நேர்வழிகாண்பிக்கின்றானோ அவனை யாரும் வழிகெடுக்க முடியாது. இறைவன் யாரை வழிகெடச் செய்கிறானோ அவனை நேர்வழிப்படுத்துபவன் யாரும் கிடையாது. அல்லாஹ்வைத்தவிர வணக்கத்துக்குரிய இறைவன் இல்லை. அவன் ஒருவன், தனித்தவன், ஈடு இணையற்றவன், ஆட்சியாளனும் அவனே. எல்லாப் புகழும் அவனுக்கே உரியது. வாழ்வளிப்பவனும், மரணிக்கச் செய்பவனும் அவனே. அவனே ஒவ்வொரு பொருள்மீதும் ஆதிக்கமுள்ளவனாக இருக்கிறான். இறைவன் ஒருவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் வாக்குறுதியை நிறைவேற்றினான். அவன் தன் அடியானுக்கு பேருதவி அளித்தான். அவன் தனியாக இருந்து எல்லாப் படைகளையும் வீழ்த்தினான்.

மக்களே! நான் சொல்வதை மிகவும் கவனத்துடன் கேளுங்கள் இந்த ஆண்டிற்குப் பிறகு நான் இந்த இடத்தில் உங்களை சந்திக்க முடியாமல் போகலாம். அடுத்த ஆண்டு ஹஜ் செய்ய முடியாமல் போகலாம்.

மக்களே! இறைவன் கூறுகிறான்! மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக்கொள்ளும் பொருட்டு உங்களை குலங்களாகவும், கோத்திரங்களாகவும் அமைத்தோம். உண்மையில் அதிக கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்கள்தாம். அரபியருக்கு அரபி அல்லாதவரைவிட அல்லது அரபி அல்லாதவர்களுக்கு அரபியரை விட யாதொரு சிறப்பும் கிடையாது. கறுப்பருக்கு வெள்ளையரைவிட அல்லது வெள்ளையருக்கு கறுப்பரைவிட யாதொரு உயர்வும் கிடையாது. சிறப்பும் உயர்வும் இறையச்சத்தின் அடிப்படையில் தான் கிட்டும்.

- மக்கள் அனைவரும் ஆதத்தின் (ஆதிமனிதரின்) சந்ததிகளே! ஆதம் அவர்களோ மண்ணால் படைக்கப்பட்டவர்கள்.

- பாரம்பர்யத்தை வைத்து அல்லது இரத்த பந்தத்தை வைத்து அல்லது செல்வத்தை வைத்து பெருமையடிக்கும் முறை அனைத்தையும் என் காலடியில் போட்டு மிதித்து விட்டேன்.

- அறியாமைக் காலத்தில் (இஸ்லாத்திற்கு முன்பு) இருந்த மூடப்பழக்கவழக்கங்கள் அனைத்தையும் என் காலடியில் போட்டு மிதித்து விட்டேன். அறியாமைக் காலத்தில் இருந்த (கொலைக்கு பதிலாக கொலைசெய்தல்) என்ற கோரிக்கைகள் அனைத்தும் கைவிடப்பட்டன. இதன் அடிப்படையில் நாம் ரபீஆ பின் ஹாரிஸ் உடைய மகனின் இரத்தக் கோரிக்கையை கைவிடுகிறோம். அவர் பனீசஅத் என்ற கோத்திரத்தில் பாலூட்டப்பட்டவராக இருந்தார்.

- இதே போன்று அறியாமைக் காலத்தில் இருந்த வட்டி பாக்கி அனைத்தும் ரத்து செய்யப்படுகிறது. என் சிறிய தந்தை அப்துல் முத்தலிப் உடைய மகனார் அப்பாஸ் அவர்களுக்கு சேரவேண்டிய வட்டியை ரத்து செய்கிறேன். இது முழுமையாக கைவிடப்பட்டது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

- மக்களே! உங்கள் இரத்தம் (உயிர்), உங்கள் பொருள், உங்கள் மானம், மரியாதை (இவையனைத்தும்) நீங்கள் இறைவனை சந்திக்கும் வரை (வாழ்நாள் முழுவதும்-உலகம் இருக்கும்வரை) இன்றைய (அர.்.பா) நாளைப் போன்று, உங்களின் இந்த (துல்ஹஜ்) மாதத்தைப் போன்று, உங்களின் இந்த (மக்கா) நகரத்தைப் போன்று கண்ணியமிக்கதாகும். நீங்கள் விரைவில் உங்கள் இறைவனை சந்திக்க இருக்கிறீர்கள். அவன் உங்கள் செயல்கள் குறித்து விரைவில் விசாரிக்க இருக்கிறான்.

- மக்களே! உங்களுக்காக உங்கள் மனைவியர் செய்ய வேண்டியதும், உங்கள் மனைவியருக்காக நீங்கள் செய்யவேண்டியதுமான சில கடமைகள் உள்ளன. உங்கள் மனைவியர் மீதுள்ள கடமையாதெனில் நீங்கள் உறங்குமிடத்தில் எவரையும் அவர்கள் அனுமதிக்கக் கூடாது. நீங்கள் அதை விரும்புவதில்லை. மேலும் அவர்கள் மானக்கேடான காரியங்களில் ஈடுபடக் கூடாது. அவ்வாறு அவர்கள் ஈடுபடும் போது அவர்களை (த் திருத்தும் வண்ணம்) படுக்கையிலிருந்து ஒதுக்கி வையுங்கள். அதற்குப் பிறகும் அவர்கள் திருந்தவில்லையெனில் காயம் ஏற்படாவண்ணம் அடியுங்கள். திருந்திவிடும் பட்சத்தில் அவர்களுக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமை யாதெனில் அவர்களுக்கு வாழ்வின் தேவைகளையுமு உடையையும் வழக்கம் போல் வழங்குவதாகும்.

- மனைவி கணவனுடைய அனுமதியின்றி "கணவனுடைய" பொருளை எடுத்து யாருக்கும் தரக்கூடாது.

● மனைவியருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளும் விஷயத்தில் என்னுடைய அறிவுரையைச் செவிமடுங்கள். ஏனெனில், இவர்கள் உங்களுடைய ஆதரவில் இருப்பவர்கள் சுயமாக செயல்படக்கூடியவர்கள் அல்லர்.

● பெண்கள் விஷயத்தில் இறைவனுக்கு அஞ்சுங்கள்.

● மக்களே! மகத்துவமிக்க இறைவன் உங்களில் ஒவ்வொருவருக்கும் சேரவேண்டிய நியாயமான உரிமைகளை வழங்கியுள்ளான். ஆகவே, சொத்துரிமை உள்ளவனுக்கு வஸிய்யத் எனும் (மரண சாசனம்) செய்வது கூடாது.

● தகப்பனை விட்டு வேறொருவனை தகப்பன் என்பவனுக்கும், தன் எஜமானனை விட்டு வேறொருவனை எஜமானன் என்று கூறுபவனுக்கும் இறைவனுடைய சாபமே உண்டாகும். (இந்த விஷயங்களை மூடிமறைப்பது குற்றமாகும்).

● (வட்டி மன்னிக்கப்பட்டது என்றால் கடனும் மன்னிக்கப்பட்டு விட்டதாகக் கருத வேண்டாம்) கடனாளி கடனை அடைக்க வேண்டும். இரவல் வாங்கிய பொருளை திருப்பித் தரவேண்டும். பொருப்பேற்றுக் கொண்டவன், பொருப்பேற்றதற்குக் கடனாளியாவான்.

● குற்றவாளி தன் குற்றத்திற்கு பொறுப்பாளன் ஆவான். தகப்பனுடைய குற்றத்திற்குத் தமையனோ, தமையனின் குற்றத்திற்கு தகப்பனோ பொறுப்பாளி அல்லன் என்பதை அறிவீராக!

● எந்தவொரு மனிதனும் தன் சகோதரனுடைய பொருளை எடுத்துக் கொள்வது ஆகுமானதன்று. அவரே விரும்பிக்கொடுத்தாலே அன்றி! ஆகவே, யாரும் யாருக்கும் அநீதி இழைத்தலாகாது.

● மக்களே! ஒவ்வொரு முஸ்லிமும் (மற்றொரு) முஸ்லிமுக்கு சகோதரனாவான். அனைத்து முஸ்லிம்களும் சகோதரர்களாவர்.

● உங்கள் அடிமைகள் (ஆம்) உங்கள் அடிமைகள் (விஷயத்திலும் கவனமாக இருங்கள்). நீங்கள் உண்ணும் உணவையே அவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள். நீங்கள் உடுத்தும் உடையையே அவர்களுக்கும் வழங்குங்கள்.

● ஒருவரை ஒருவர் படுகொலை செய்வதில் ஈடுபட்டு இறைவனை நிராகரிப்பவர்களாக மாறிவிட வேண்டாம் என்று உங்களை எச்சரிக்கின்றேன். மூ அமானிதம் யாரிடம் தரப்பட்டதோ அவர் அதை அதற்கு உரியவரிடம் ஒப்படைக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

உங்கள் மீது மூக்கறுபட்ட, கருநிறமுள்ள அடிமையொருவர் தலைவராக நியமிக்கப்பட்டாலும், இறைவேதத்தின் (குர்ஆனின்) படி அவர் உங்களை வழிநடத்தும்போது அவருடைய சொல்லுக்கு செவிசாயுங்கள். அவருடைய ஆணைக்குக் கட்டுப்படுங்கள்.

● மக்களே! எனக்குப் பிறகு இறைதூதர் இல்லை. உங்களுக்குப் பிறகு நபிவழிநடக்கும் கூட்டத்தவர் இல்லை.

● மக்களே! நான் உங்களிடையில் ஒன்றை விட்டுச் செல்கின்றேன். அதை நீங்கள் பற்றிப்பிடித்திருப்பீர்கள் எனில் நீங்கள் வழிதவற மாட்டீர்கள். அதுதான் இறைவேதம் (அல் குர்ஆன்).

● மார்க்க விஷயத்தில் வரம்புமீறித் செல்வதைத் தவிர்த்திடுங்கள். உங்களுக்கு முன் வரம்புமீறிய கூட்டத்தினர் அழிவுக்கு ஆளாயினர்.

● மக்களே! இந்த மண்ணில்தான் வணங்கப்படு வோம் என்ற நம்பிக்கையை ஷைத்தான் இழந்து விட்டான். இது சாதாரண விஷயம்தானே என்று கருதும் செயல்களில் நீங்கள் அவனை வழிபடுவீர்கள். அதைக் கொண்டே அவன் திருப்தியடைவான். ஆகவே, நீங்கள் மார்க்க விஷயத்தில் (அது சாதாரண விஷயமாயினும்) அச்சத்துடன் நடந்து கொள்ளுங்கள்.

● உங்கள் இறைவனை வணங்குங்கள். ஐவேளைத் தொழுகை தொழுங்கள். ரமழான் நோன்பை கடைப்பிடியுங்கள். மனத்தூய்மையுடன் உங்கள் செல்வத்திற்கு ஸகாத் வழங்குங்கள். உங்கள் இறைவனுடைய இல்லத்தை ஹஜ் செய்யுங்கள். இறைவனுடைய சுவர்க்கத்தில் நுழைவீர்கள்.

● இங்குள்ளவர்கள் இங்கு இல்லாதவர்களுக்கு (இந்த அறிவுரைகளை) எத்திவைக்கவும். (ஏனெனில்) எத்தி வைக்கப்படுபவர்களில் பலர் (இன்று) கேட்பவர்களைவிட நினைவாற்றல் மிக்கவர்களாக இருக்கக்கூடும்.

● நீங்கள் என் சம்பந்தமாக (இறைவனால்) கேட்கப்படுவீர்கள். (அப்போது) நீங்கள் என்ன கூறப்போகிறீர்கள்? கூடியிருந்த மக்கள் அனைவரும் கூறினர்: தாங்கள் அமானிதத்தை ஒப்படைத்து விட்டீர்கள். இறை செய்தியை எடுத்துரைத்து விட்டீர்கள். நன்மை நாடினீர்கள் என்று சாட்சியமளிப்போம்.

● இறைதூதர் (ஸல்) அவர்கள், வானத்தின் பக்கம் தங்கள் சுட்டு விரலை உயர்த்திய வண்ணமும் மக்களின் பக்கம் தாழ்த்திய வண்ணமும் கூறினார்கள்.

இறைவா நீயே சாட்சி!
இறைவா நீயே சாட்சி!
இறைவா நீயே சாட்சி!

*(அப்துல் ஹஃபீஸ் ரஹ்மான்)*

*(பாருங்கள்!) உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார். நீங்கள் துன்பத்திற்குள்ளாவது அவருக்குக் கடினமாக இருக்கிறது. மேலும் உங்களுடைய வெற்றியில் பேராவல் கொண்டவராகவும் நம்பிக்கையாளர்கள் மீது அதிகப் பரிவும், கருணையும் உடையோராகவும் இருக்கின்றார்! (அல் குர்ஆன் 9:128)*

வடமாகான முஸ்லிம்களே! இது உங்களின் சிந்தனைக்கு!!

# வடபுல முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம்

**1990ம் ஆண்டு ஒக்டோபர்**

அகதி நிலையில் அவதி வாழ்வு வாழும் வடமாகாண முஸ்லிம்களின் பின்வரும் அபிலாஷைகள், அடிப்படை உரிமைகள் நிறைவேறுமா? யார் பொறுப்பு?

1. தமது பாரம்பரியப் பிரதேசங்களில் இருப்பிடங்களில் வாழ்வதற்கான உரிமை.
2. உயிர், உடமைகள், மீண்டும் பலவந்தமாக வெளியேற்றப்பட மாட்டோம் என்பதற்கான உத்தரவாதம் — பாதுகாப்பு.
3. சொத்துக்களை மீளப் பொறும் உரிமை.
4. இழுந்த அசைவுள்ள அசைவற்ற சொத்துக்களுக்கு முழுமையான நட்டஈடு.
5. புனர்வாழ்வு, புனரமைப்பு, புனர்நிர்மாணம்.
6. பாரம்பரிய பிரதேசங்களில் மீள்குடியேறும் வரை தற்போது வாழும் இடங்களிலேயே வாழ்வதற்குத் தேவையான வசதிகள் — அடிப்படை உரிமைகள்.

**பொறுத்தது போதும்! விழிப்படையுங்கள்!! உணர்ச்சிபெறுங்கள்!!!**
**உரிமைகள் காக்கப் புறப்படுங்கள்...**
**ஐக்கியப்பட்ட கூட்டு முயற்சியே எமது வெற்றிக்குரிய ஒரே வழியாகும்**
**இதற்கான பாதையை திறந்து வைத்துள்ளது**

## மக்கள் பணிமனை

சமூக, தாயக விடுதலையே எமது பிரதான குறிக்கோளாகும்.
உணர்வுள்ளவர்கள் இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

Puttalam Branch:
PEOPLE'S SECRETARIAT
NO: 07, Thirty Housing Scheme Street, Thillaiyadi, Puttalam.
Tel/Fax: 032 22 69339. E-mail: ps@dynaweb.lk

**எங்கள் தாயகம் வடக்கு**

ஒன்றுபடுவோம் வெற்றிபெறுவோம்

நேசக்கரங்கள்

வடபுல முஸ்லிம்களின் புத்தளம் அகதிமுகாம்

சிறார்களின் அவலங்களின் ஒரு பக்கம்

